# கலைச்செல்வி

196

25 சதம்

8-2



நல்லவரின் உள்ளம்போல்
என்றுமே ஒளிவிடும்
எவர்சில்வர் பாத்திரங்கள்!

- சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள்!
- சத்தும் ருசியும் நிறைந்த டின்பால், பால்மா வகைகள்!



மொத்தமாக,
சில்லறையாக,
குறைந்த விலையில்
நிறைந்த திருப்தியுடன்
வாங்கக்கூடிய
ஒரே இடம்

# எஸ். வி. பொன்னம்பலம் அன்ட் சன்ஸ்

345, மெயின் வீதி, : கொழும்பு-11.

தொலைபேசி : 4475


ஸ்டீம் பீடி
ஸ்பெஷல்
புத்துணர்வை
ஊட்டும்
உயர்ந்த பீடி.
STEAM
BEEDI
SPECIAL
UNION COMPANY PALAKARAI TRICHY
STEAM JADI BEEDI
STEAM JADI BEEDIES
ஸ்டீம் ஜாடி பீடி
யூனியன் கம்பெனி, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.
யூனியன் கம்பெனி
N. B. ABDUL GAFOOR
102/2, WOLFENDHAL St., COLOMBO-13
PHONE: 4929.
GRAM: GAFOORBIDI.

# வீட்டுக்கு ஒரு வாசிகசாலை

**உங்கள் வீட்டு வாசிகசாலையில்
இடம்பெறவேண்டிய சிறந்த
மூன்று நூல்கள் இவை!**

1 **கயமை மயக்கம்.**

வரதர் எழுதிய சுவையான
சிறுகதைகளின் தொகுப்பு

**விலை: 2-25**

2 **சிலம்பொலி**

நாவற்குழியூர் நடராஜன் ஆக்கிய
அருமையான கவிதைக் கொத்து

**விலை: 1-75**

3 **சிலம்பின் சிறப்பு**

பொன் முத்துக்குமாரன் தரும்
தீஞ்சுவைச் சொல்லோவியம்

**விலை: 2-50**

**வரதர் வெளியீடு**

**226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

தந்தி: அச்சகம் போன்: 348





# கலைச்செல்வி

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

—பாரதியார்

கலை: 8 | மாசி FEBRUARY: 1966 | காட்சி:2

## உள்ளே உள்ளவை

சிறுகதை:

மேவுவீர் தீக்கொண்டு — முனியப்பதாசன்
வேள்வித் தீ — செங்கை ஆழியான்

தொடர் நவீனம்:

கர்ப்பக் கிருகம் — செம்பியன் செல்வன்
அன்பில் குரல் — சிற்பி

கவிதை:

பாதை — அண்ணல்
கம்பன் கவித்வம் — முருகையன்

பிற:

அகல் விளக்கு
வாழ்வும் வாக்கும்
பலதும் பத்தும்
புராணம் பொய் — மு. கனகராஜன
திரை விருந்து
பட்பட் — தாண்டவக்கோன்
பேரும்பரிசும்




ஆசிரியகவி!

'சு. வே'யின் 'பாரிசவாதம்' பண்பு பிறழாமல் உயர்ந்து நிற்கிறது. பெரி சண்முகநாதனின் கதையும் அதேயானாலும் இரு முடிவுகளுடன் நிற்கிறது. இவ்வகைக் கதைகளுக்கு மூன்றாவது முடிவும் ஒன்றுண்டு: மறுமணம்—விதவா விவாகம்! ஆசிரியருரை மறு இதழில் கவிதை வடிவிலேயே எழுதப்படுமா?

திருநெல்வேலி.

தேவன்-யாழ்ப்பாணம்

ஆயிரத்தில் ஒருத்தியம்மா!

பொங்கல் மலர் ஆயிரத்தில் ஒன்று! 'எம். வி. வி'யின் படைப்பு அற்புதம்!

யாழ்ப்பாணம்.

'செம்பியன் செல்வன்,

விளக்கொலி!

நாகராஜனின் சிறுகதை மிகவும் நன்று. கனகராசனின் 'சித்திரம்' அருமை!

வத்தளை. பெரி. சண்முகநாதன்

தலைக்குரல்!

எல்லாவற்றிற்கும் தலையாகத் தங்களின் 'அன்பின் குரல்' ஒலிக்கின்றது. யாழ்வாணனின் 'முள்' நடுவே பூத்த மலர்களெல்லாம் மணத்தை அள்ளி வீசுகின்றன.

நல்லை அமிழ்தன

முதல் இதழ்!

திறமையும், ஆற்றலும், சிறப்பும் உள்ளவர்களைப் போற்றும் தங்கள் கொள்கை சிறந்தது எமது படிப்பகத்தில் முதல் சிறந்த பத்திரிகையாகப் போற்றப்படுவது கலைச் செல்வியே!

சாவகச்சேரி. த. பவளகேசரி

தொடரும்!

'கர்ப்பக்கிருகம்' நிச்சயம் கலைச் செல்வியின் பெயரை தமிழ் மக்களிடையே பரபரப்பாகப் பேசச் செய்யும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணம் 'ஓர் இரசிகை'

மிதவை!

தமிழ்மொழி மசோதா நமக்குக் கிடைத்த ஒரு 'மிதவை'யே! தலையங்கம் மிக அழகாக அமைந்துள்ளது

வேலணை-5 செல்வி. மணிமொழி

மோதல் மோகினி!

விளக்கினில் நாகராஜன் வெளிச்சத்தைக் காட்டிவிட்டார்.
வேதனையமுதே 'சுவே'யின் கதையிலே குமுறுதப்பா.
தளுக்கினில் 'மங்கை' தரத்தினைக் கூட்டுகிறாள்.
தவிப்பினில் 'ஆசிரியர்' சொக்கனை மிஞ்சிவிட்டார்.
விழியொடு 'சிற்பி'யின் மாதவி சிரித்திடுவாளா?
விதியொடு 'செம்பியன் செல்வன்' ஊடிடுவாரா?
மொழியினில் கனகராசன், வெங்கட்ராமனொடு,
மோகினியாய் 'கலைச்செல்வி' மோதிவிட்டாளே!

நல்லூர். 'யாழினி,

# அகல் விளக்கு

இற்றைக்குச் சரியாகப் பதினெட்டு ஆண்டுகளின் முன்னுல் நமது நாட்டிலே சுதந்திர சூரியன் உதித்தான்; தன் தண்கதிர்களால் இந்நாட்டின இனங்களை இணைத்தான்; மொழிகளைத் தழுவினுன்; மதங்களை மருவினுன; கலாச்சாரங்களைக் கலந்தான்.

ஆனந்த மிகுதியால் மக்கள் ஆடினர்; பாடினர். முன்னேற்றப் பாதையில் மோகனமாய் நடந்தனர். சுதந்திர ஒளியில் அவாகளின் வழி துலங்கியது.

வீடு செழித்திட, நாடு கொழித்தது.

நாள்கள் நடந்தன.

சுதந்திர சூரியனை மொழி வெறிக் கிரகணம் பீடித்தது.

நாட்டின் தமிழ்ப் பகுதிகள் இருண்டன. திக்குத் திசை தெரியாமல் திகைத்தனர் மக்கள்.

தமிழ் இனமென்ற அகலில், தாய் மொழியென்ற திரியில் ஒற்றுமை என்ற நெய்யில் நல் விளக்கேற்றினர் நம் தலைவர்கள்.

நாள்கள் நகர்ந்தன.

நல்ல காலம் வந்தது கிரகணம் நீங்க மீண்டும் சுதந்திரப் பேரொளி கிடைத்தது.

புத்துணர்ச்சியும் புதுமலர்ச்சியும் பெற்றுவருகின்றனர் மக்கள்.

தேசீய ஒற்றுமைப் பூங்காவில் அன்புமழை பொழிந்து, பண்பு மரம வளர்ந்து இன்ப மலர் மலரும் என நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போம்.

அதே வேளையில் இதையும் நினைவில் வைப்போம்:

சூரியனின் முன்னே, அகல் விளக்கு மின்மினிதான். ஆனுல் அது அணையாமற் காப்பது நம் அத்தியாவசியக் கடமை. ஆபத்து வரும்போது அதுதானே நம் துணைவன்?

# வாழ்வும் வாக்கும்

**கவிஞர்கள் தீர்க்கதரிசிகள்.**

உள்ளத்தாற் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் — எனத்

திருவள்ளுவ மஹாகவி பாடியபோது, அப்படி வாழ்ந்து காட்டி அக்குறளுக்கு அர்த்தமும் அமரத்துவமும் அளிப்பதற்கு ஒரு மஹாத்மா காந்தி இம்மண்ணிலே அவதரிப்பார் என எதிர்பார்த்திருப்பாரோ?

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும் — என்றும்

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேனும் காத்தலரிது — என்றும்

அதே திருவள்ளுவர் பாடியபோது, அவற்றின் உருவும் உயிரும் உட்பொருளுமாய் விளங்க ஒரு ஜவாஹர்லால் நேரு உதிப்பார் என எண்ணியிருப்பாரோ?

உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள்
[பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னாருடைத்து — எனத்

திருவள்ளுவரும்,

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும் — எனப்

பாரதியாரும் பாட்டிசைத்தபோது அவற்றின் தனிப்பெரும் இலக்கியமாய், இத்தரணிக்கே வழிகாட்டியாய்த் திகழ ஒரு லால்பகாதூர் சாஸ்திரி தோன்றுவார் எனக் கருதியிருப்பார்களோ?

கவிஞர்கள் தீர்க்கதரிசிகள்தாம்!

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். நமது பொங்கல் மலரைப் பாராட்டி இன்னமும் கடிதங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. பலதரப்பட்ட வாசகர்களின் ஆவலையும் பூர்த்தி செய்ய முடிந்ததில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஒரு சில அன்பர்களின் கடிதங்களையே இந்த இதழில் வெளியிடுகின்றோம். மனப்பூர்வமாகப் பாராட்டிய அனைவர்க்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் ஒத்துழைத்தால், நல்ல முறையிலே கலைமலர் ஒன்றை வெளியிடலாம் என்பதற்கு நமது "கலைச்செல்வி" பொங்கல் மலர் ஓர் எடுத்துக்காட்டு. இந்த ஒத்துழைப்பு, இனியும் தொடர்ந்து கிடைத்து வரும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றோம்.

மலரில் வெளியான "பாரிசவாதம்" என்ற கதையைப் பாராட்டி வாசகநேயர் ஒருவர் எழுதிய கடிதத்தைத் தனியாக ஓரிடத்தில் வெளியிட்டுள்ளோம். "கலைச்செல்வி"யில் வெளியாகும் எழுத்தோவியங்களை நமது வாசகர்கள் எவ்வளவுதூரம் ஊன்றிப் படிக்கின்றார்கள் என்பதை அன்பரின் கடிதம் காட்டுகின்றது. வாசகர் ஒருவரே சன்மானமளிக்க முன்வந்தது. தமிழ்ப் பத்திரிகை வரலாற்றிலேயே ஒரு புதுமையாகும். அந்த வாசகரையும் எழுத்தாள நண்பர் சு. வே. அவர்களையும் பாராட்டுகின்றோம்.

சித்திரை இதழ், குறிஞ்சி மலராக, மலைநாட்டு இலக்கிய கர்த்தாக்களின் விசேட படைப்புகளுடன் வெளியாகின்றது. மலர் பற்றிய அறிவித்தல் இந்த இதழிலே பிறிதோரிடத்தில் வெளியாகியுள்ளது. மலர் உரிய காலத்தில் மலர்ந்து நறுமணம் பரப்புவதற்கு மலையக எழுத்தாள அன்பர்கள் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

வெறும் கதைகளுடன் நில்லாமல், தொழில்வளம் பற்றிய கட்டுரைகள், ஈழநாட்டின் பிரமுகர்களைப் பற்றிய சுவையான செய்திகள், பேட்டிக் கட்டுரைகள் முதலியவற்றையும் சேர்த்து வெளியிடும்படி சில அன்பர்கள் எழுதியுள்ளனர். இப்படியான திட்டம் நம்மிடமும் உண்டு. ஆனால் எல்லா அம்சங்களையும் ஒரே தடவையில் வெளியிடுவதானால், "கலைச்செல்வி"யின் பக்கங்களை அதிகரிக்க வேண்டும். திடீரென்று அப்படிச் செய்வதற்கான பொருளாதாரப் பலம் இப்போது இல்லை. ஆகவே சிறிது சிறிதாக இந்த அம்சங்களைப் புகுத்த முயல்வோம்.

நீண்ட இடைவேளையின் பின்னர், ஈழத் தமிழர் சுதந்திர தினத்தை மிகவும் குதூகலமாக இம்மாதம் கொண்டாடுகின்றனர். தேசிய ஒற்றுமை, நாட்டு முன்னேற்றம் ஆகியவற்றின் சின்னமாக மிளிரும் நமது பிரதமர் டட்லி சேனநாயக்கா அவர்களின் உருவத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் அட்டையில் வெளியிடுகின்றோம்.

—ஆசிரியர்.

...ந்தரக் குணங்கள் கொண்ட அந்த இளவயதுசுந்தரிக்குக் காதல் விடுதூது கிடைத்தது. அவளுள்ளத்தே 'அவன்' இனித்தான்; அவள் 'அவனி'ன் நெஞ்சமானாள்.

தலைவி தன் காதலனை எண்ணியெண்ணிச் சோர்ந்தாள். தாய் அறிந்தாள், தந்தைக்கும் கூறினாள் உடனே:

சுயம்வரம்தான்! நிச்சயமாயிற்று சுபநாள். ஆனால் முன்பே கூறிவிட்டாள் தன் நாதனுக்கு, 'அன்பே! உங்களுக்காகவேதான சுயம்வரம், வந்துவிடுங்கள் தவறாது' என்று. என்றாலும் தூங்குமா நெஞ்சம்—பெண்ணல்லவா!

காதல் மனம்துவளுகிறது. 'மன்மதனின் அம்பு பட்ட துளைவழியே உயிரே போனாலும் 'அவர்' மீது நான் கொண்ட காதல் மாத்திரம் மாளவே மாளாது' என்று ஏங்கித் தவமிருக்கிறாள்.

...நிறைந்த இனிய ...

இதெல்லாம் ஏன்?

கருமபு வில்லோன் தன் காந்தர்வ மலரம்புகளை அவ்விருவர்மீதும் செலுத்தியதனாற்றானே இவை காதலன் தவிக்க, காதலி துடிக்க, இன்பம் தணிக்கக் காரணம் காமனல்லவா?

அவன் பெரிய உல்லாசி.

அதோ, கானகமும், பெருங்காவுமான அவனது படைக்கல வீடுகள்; நீலவண்ண விசும்பு அவன் தேர் செலுத்தும் வீதி; அப்பெருநெளியுங் கடல் மீனக்கொடி; பரந்துகிடக்கின்ற பிரபஞ்சமே அவனது அற்புத வில்ஜாலம் காட்டும் மேடை. இந்த இயற்கைக் காட்சிகளுக்குத் தான் அழிவுண்டா?, இவையாரும் அந்தரங்கக் காதலுக்குத்தான் ஓய்வுண்டா?

எங்கும காதல் ஏக்கம். காதலர் துன்பம்.

# இலக்கியச் சித்திரம்

## புராணம் பொய்

—மு. கனகராஜன்

தலைவனுக்கும் அதே 'காந்தர்வ நோய்'தான். துன்பம் மிகக் கொண்டான். தூது வந்தபோது தன் உள்ளத்தரசியின் நிலை கேட்டு நெட்டுயிர்க்கிறான்.

அவளது நிலவு முகம், குவளை மலர்க் கண், வில்போன்ற புருவம் கார்வண்ணக் குழல், வாழைத் தண்டுக் காம், மூங்கில் தோள், நுனி ஈட்டி விழி, சிப்பி உதடு சிங்கார உருவம் அனைத்துமே கண்ணில் வழிந்து உன்மத்தம் கொள்ளச் செய்தன.

தன் வருகையைச் சொல்லிவிட்டு 'இந்நேரம் என் தூது போயிருக்குமா? அது என் காதலியைக் கண்டிருக்குமா? இப்போது செய்தி என் இன்பராணிக்குச் சொல்லப்படுமா? இந்நேரம் பதில் மீளுமா?'

இது இப்படியிருக்க, மன்மதன் எரிக்கப்பட்டான் என்கின்றனரே; உண்மையா? அந்த மலர்க்கணையோன் மாய்க்கப்பட்டிருந்தால் இந்தத் தலைவனும் தலைவியும் ஏனிப்படித் துயர்பூணவேண்டும்? அவன் இறக்கவில்லை. ஆம் மன்மதன் வாழ்கிறான்! அப்படியானால் புராணம்...

ஆமாம்; திருநீற்றுப் பொடி பூசிய சிவபெருமான் மாரனை எரித்தார் என்பதெல்லாம் பொய்தான்!

"கானுந் தடங்காவும்
காமன் படைவீடு;
வானுந் தேர்வீதி;
மறிகடலும்—மீனக்
கொடியாடை; வையமெல்லாங்
கோதண்டசாலை;
பொடியாதடி
கொன்றதெல்லாம் பொய்."

வாதை தருஞ் சூதாம் வழிப்
பாதை நடை பாதை - மிகப்
போதை எழும் போகு மிடம்
போதல் குறி யாகும் உளம்
ஏதை நினை வாக்கும் உயிர்
ஏகு மிட மாமோ வது?
தாதை அறி யார்கள் வழி
தேடி யலே வார்கள் - இது
வாதை தருஞ் சூதாம் வழிப்
பாதை நடை பாதை

மண்ணில் விளை வாகும் உயிர்
மழையால் செழிப் பாகும் வெயில்
விண்ணின் வழி காற்றும் வரும்
வளமாய் நிலை கோலும் கிளை
எண்ணும் மிக வாகும் எழில்
எங்குஞ் சுடர் வீசும் இணை
பின்னும் கனி வாகும் விதை
யாகும் விளை வாகும் வழி
வாதை தருஞ் சூதாம் வழிப்
பாதை நடை பாதை

வந்த வழி தெரியா தினி
வரவு செல வாகும் இதில்
எந்தை வழி இருளாம் ஒளி
எங்கோ மறைந் துளதாம் தொடர்
சிந்தை யுள! வந்தார் பலர்
சேர்ந்தார்! எதில் சேர்ந்தார் - என
நொந்தே வினை வாகும் காலும்
நோக நடை போடும் வழி
வாதை தருஞ் சூதாம் வழிப்
பாதை நடை பாதை

---

பாதை அண்ணல்

---

கடலுந் தொடு வானுந் திசை
காட்டும் மலை முகடும் மிக
இடறும் எனும் நினைவோ? துயர்
இயங்கா நிலை தருமோ? கதிர்
உடுவுங் குளிர் நிலவும் வழி
காட்டுங் குண முளவோ? தரை
படரும் வழி கோடி பலர்
பயணந் தொடர் வழியே யிது
வாதை தருஞ் சூதாம் வழிப்
பாதை நடை பாதை

சந்தை விலை கூறுங் குரல்
சாருந் திசை யெங்கும் பொருள்
வந்தும் அவை போயும் மிக
விரைவில் அழி வாகும் இருள்
சிந்த ஒலி மாயும் தெரு
தேங்கும் வெறு மமைதி! இதில்
வந்தோர் வழி யெதுவோ? போன
வழியும் எதோ வறியேன் இது
வாதை தருஞ் சூதாம் வழிப்
பாதை நடை பாதை.

# நம்நாட்டு வாசகர்

நமது ஈழநாட்டைப் பொறுத்த வரையில், பத்திரிகைகளுக்கோ, சஞ்சிகைகளுக்கோ குறைவில்லை. ஆனால் ஒன்றாயினும் நேர – காலத்தோடு வெளியிடப்பெற்று; வாசகர் சுவைத்து மகிழ வெளிவருவதில்லை. இதனால் என்னைப்போன்ற பல இலக்கிய – எழுத்தார்வமுள்ளவர்களின் மனம் ஒருவித அதிருப்தி அடைகிறது. ஈழத்து இலக்கிய உலகிலே பல சஞ்சிகைகள் பவனி வருவதையிட்டு நாம் பெருமைப்படவேண்டும், என்று சோதரர் அ. கனகசூரியர் ஐப்பசித் திங்களிதழில் எழுதியிருந்தார். இதில் நாம் ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, அதிக சஞ்சிகைகள் வெளிவருவது குறித்துப் பெருமைகொள்வது உ.கந்ததல்ல; அவைகளின் வளர்ச்சியைக்கண்டே நாம் பெருமையிலும் பெருமை அடைய வேண்டும்.



செல்வி இரா. சரசுவதி
ஸ்பிரிங்வல்லி

தமிழ் நாட்டைப் பாருங்கள்! அங்கு வெளியாகும் கல்கி, ஆனந்த விகடன், கலைமகள் இம் மூன்று சஞ்சிகைகளின் வளர்ச்சிக்காலத்தை எண்ணிப் பாருங்கள்!! அத்தகைய நீண்டகாலத் தமிழ் சஞ்சிகைகள் நம் நாட்டில் இல்லையே? இது யார் குற்றம்? நம்நாட்டு வாசகர்மீது முதல் குற்றமும். சஞ்சிகைகளை நடாத்துபவர்கள்மீது இரண்டாவது குற்றமும் இருக்கிறது. ஈழத்துப் பத்திரிகைகள் வளர்ச்சியடைய வேண்டுமெனின், நம்நாட்டு வாசகர்கள். இலவச இதழ்களைப் படிக்காது, விலைகொடுத்து வாங்கிப் படிக்கவேண்டும்; அதே தருணத்தில் பத்திராதிபர்களும், ஆசிரியர்களும் ஒன்றுபட்டு – உழைத்துச் சஞ்சிகைகளை நேரகாலத்தோடு ஒழுங்காக வெளியிட வேண்டும்.

நமது ஈழத்திரு நாட்டில் வெளிவரும் சஞ்சிகை – பத்திரிகைகளில் நான் முதலாவதாகத் தேடிப் படிப்பது "உருவகக்கதைகள்"தாம. அத்துடன் சீர்திருத்தக் கதை-கட்டுரை- கவிதைகளையும் விரும்பி வரவேற்கிறேன். கலைச்செல்வியைப்பொறுத்தமட்டில் எதிர்காலம் நல்ல முறையில் பிரகாசிக்கும் என்பது என்றன் நம்பிக்கை. ஒரு சஞ்சிகையை வாயாரப் புகழ்வதில் பிரயோசனமில்லை. அதன் வளர்ச்சிக்காக நம்நாட்டு வாசகர் ஒத்துழைக்க வேண்டும். ஈழத்தில் வெளியாகும் சஞ்சிகைகளில் ஆகமூன்றையாவது ஒவ்வொருவரும் விலைகொடுத்து வாங்கிப் படிக்கவேண்டும்.

ஈழத்துச் சஞ்சிகைகளில் என்னைக் கவர்ந்தவை: கலைவாணி, கலைச்

செல்வி, ஈழச்சுடர், விவேகி, செந்தாமரை, புதிதாக வெளியிடப்பெற்ற அல்லி போன்றவைகளாகும். இவைகள் ஏன் என்னைக் கவர்ந்தன? இலக்கிய மணமும், தமிழ்மணமும் கலந்து உறவாடுவதால், வருங்காலத்தில் இவை நன்கு வளர்ச்சியுற வாய்ப்புண்டு; இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பெரும் பண்பு உண்டு இவ்வாறு இச்சஞ்சிகைகள் என்னைக் கவர்ந்தபோதிலும், யான் வாழும் பகுதியில் இச்சஞ்சிகைகள் நேர - காலத்தோடு விற்பனைக்கு வருவது இல்லை. இதையிட்டு நான் பெரிதும் மனங் கவல்கின்றேன். அத்துடன் இந்தச் சஞ்சிகைகள் ஈழநாட்டில் நீண்ட காலத்திற்குப் பவனிவருமா என்ற வினாவும் என் மனத்தினுள் எழுகின்றது. ஏனெனில், ஈழத்தில் பத்திரிகை வெளியிடுபவர்க்கிடையில் போட்டியும், பொறாமையும், ஒற்றுமையின்மையும் நிலவுவதால், நல்ல-தரமான சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கிறார்கள். இந்த இழிநிலை என்று அகலுகின்றதோ அன்றுதான் இலங்கையில் நல்ல இலக்கிய இதழ்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.



தயாரிப்பாளர்கள்:-
RVG பீடிக் கம்பெனி,
34, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.




இலங்கையில் 1958ல் இனக் கலவரம் ஏற்படவும், சமூக ஒற்றுமையில் அகண்ட பிளவிற்குங் காரணமாயிருந்தது அப்போதைய பிரதமரான காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா கொணர்ந்த தனிச் சிங்களச் சட்டம்தான். அந்தச் சட்டத்தினாலே ஈழத்தில் மிகப் பாரதூரமான விளைவுகளும், துன்பங்களும், பொருளாதார வீழ்ச்சியும் ஏற்பட்டதென்பது உலகறிந்ததே. தனிச் சிங்களத்திலேயே எல்லா அலுவல்களும் நடத்தப்படவேண்டும், அதுவே ஆட்சிமொழி என்றதற்கு மூலவராயிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. யைப்பற்றி ஒரு சுவையான செய்தியை அறிவீர்களா?—அவருக்கு அவரின் தாய்மொழியான சிங்களத்தில் எழுதவோ வாசிக்கவோ தெரியாது!

∴ ∴ ∴

'நோபல் பரிசு'பற்றி எல்லார்க்குமே தெரியும். இது, சுவீடன் தேசத்தில் வழங்கப்படுகிறது. அமெரிக்காவில் 'மரியா மூர்ஸ்' பரிசு வழங்குகிறார்கள். இதை 'கொட்ப்ரே லவல் கபொட்' என்ற வைத்தியர் மறைந்த தன் மனைவியின் ஞாபகார்த்தமாக 1939ல் ஆரம்பித்தார். இப் பரிசுக்குரிய விருதுகள் 'பத்திரிகைத்துறையின்மூலம் ஜனநாயகத்துக்குப் பாடுபட்டு உலக மக்கள் அனைவரையும் ஒன்றுசேர்க்கும்பணியில் ஈடுபட்டுள்ள சிறந்த பத்திராதிபருக்கு' என்று ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

∴ ∴ ∴

பிரபல நாவலாசிரியர் நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) அவர்கள் இலங்கை வந்தபோது நயினாதீவுக்குச் சென்றாரல்லவா? அவர் கரையிலிறங்கியவுடன், கழுத்தில் ஒருதடி கட்டப்பட்ட (வேலிகளுக்குள் நுழையாதிருக்க) நாயொன்று தென்பட்டது. உடனே நா. பா. வுடன் சென்ற நண்பரொருவர் 'விஜயன் இலங்கைக்கு வந்தபோது குவேனியிடம இட்டுச்செல்ல இப்படித்தான் ஒரு நாய் வந்தது அதைப்போலத்தான் இப்போதும்...' என்று முடிக்குமுன் நா பா. இப்படிச் சொன்னார்:— "அப்படியல்ல நான் மிகவும் விசுவாசமாயிருக்கும் என் எஜமான் என் நன்றியைப் பாராட்டி அணிவித்த ஆபரணத்தைப் பாருங்கள்' என்று எங்களுக்கெல்லாம் அன்ன நடை பயின்று காட்டுகிறது"!

∴ ∴ ∴

ஒரு பத்திரிகை அறிவித்தல்:

ஜீ சீ இ மாணவர் ஒருவரின் அடையாளச்சீட்டு ஒன்று கணடெடுக்கப்பட்டு எமது அலுவலகத்திலிருக்கிறது உரியவர் நேரில்வந்து தகுந்த அடையாளம் காட்டினால் பெற்றுக்கொள்ளலாம்!

∴ ∴ ∴

இலங்கையிலும் இந்தியாவிலும் நன்கு பிரபலமான எழுத்தாளர் சி. வைத்திலிங்கம் அவர்களைப்பற்றிய ஒரு சுவையான குறிப்பு இது: இப்போது வாழும் ஈழத்தின் முதல் எழுத்தாளரும் அவர்தான் கடைசி எழுத்தாளரும் அவரேதான்! விமர்சகர்களும் எழுத்தாளர்களும் அவரை முதல்வரிசையில் முதலாவதாகவே வைப்பார்கள். ஆனால் அகரவரிசைப் பட்டியல் அவரை எப்போதும்கடைசியிலேயே வைக்கும்!

பல வருடங்களின்பின் நாமும்சுதந்திரதினத்தை மகிழ்வோடுகொண்டாடினேம். யாழ் மாவட்டத்தின் பல இடங்களிலும் தேசியக்கொடி பறந்தது. அந்தத் தேசியக்கொடியை எப்போதாவது உன்னிப்பாகக் கவனித்திருக்கின்றீர்களா? வாளேந்தியசிங்கமும் அதற்கடுத்து மூன்று வர்ணங்களுந்தானே இருக்கின்றன. அந்த 'மஞ்சள், சிவப்பு, பச்சை'தான் இலங்கைத் தமிழரசுக்கட்சிக் கொடியின் வர்ணங்களும். ஆச்சரியப்படாதீர்கள்! ஆமாம், தேசியக் கொடியைப் பார்த்தால் தமிழரசுக் கொடியின் அரவணைப்பில் தனது எதிரிகளை நோக்கிச் சிங்கம் வாளேந்தி நிற்பதைப்போலத் தோன்றும்.

⁘ ⁘ ⁘

இரண்டாவது உலக யுத்தத்தின்போது பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், மூவரும் ஒரிடத்தில் கூடியிருந்தார்கள். அப்போது சர்ச்சில் சொன்னராம் 'நான் நேற்றுக் கடவுளைக் கனவில் கண்டேன். அவர் என்னை உலகப் பிரதமராக்குவதாகச் சொன்னர்.' இதைக்கேட்டு ரூஸ்வெல்டும் 'என் கனவிலும் கடவுள் வந்தார் என்னையே உலக ஜனதிபதியாக்குவதாகச் சொல்லிப் போனர்' என்ருர். இவற்றைக்கேட்ட ஸ்டாலின் இருவரையும் அமைதியாகப் பார்த்துவிட்டு இப்படிச் சொன்னர்:- 'என்ன ஆச்சரியம்... உங்களிருவர்க்கும் அப்படி வாக்குறுதிகள் கொடுத்ததாக எனக்கு ஞாபகமில்லையே!'

⁘ ⁘ ⁘

சிந்திக்கத் தொடங்கும்போதே இலக்கிய உணர்வும் ஆக்கத்திறனும் என்னுள்ளே முனைப்பாகத்தான் நிற்கின்றன. அந்த நிலையில் என் அகக்கண் எதிரே நானே இரு கூறுகளாகப் பிரிந்து, ஒரு கூறு மனச்சாட்சி என்ற பெண்வடிவமும் மற்றெரு கூறு அறிவு என்ற ஆண்வடிவமும் கொண்டு காட்டுவதையும் அவை ஒன்றையொன்று நோக்குவதையும் உணர்கிறேன்.

—ஆர்வி

⁘ ⁘ ⁘

நான் எந்தப் பிரச்னையையும் அலசிப்பார்க்க எத்தகைய அரசியல், சமூக, சமய சித்தாந்தங்களின் குறுகிய இதம்பைப் பெற எப்போதுமே முயலுவதில்லை. வாழ்க்கையின் எல்லா முனைகளையும் ஊடுருவி அளக்கும் சுயமான அளவுகோல் ஒன்று என்னிடம் நல்ல நிலைமையில் இருப்பதால் எந்தப் பிரச்னையையும் அதைக்கொண்டு, இலாப நஷ்டம் பார்க்காமல் அளக்கவே முயல்கிறேன்.

—ஜெகசிற்பியன்


காலம் கடந்த காட்சிகளைக் கண்டு களிப்புற

தங்கள் உருவத்தை

நாங்கள் உயிராக்குவோம்!

சிறந்த புகைப்படங்களுக்கு

முன்னணியில் திகழ்வது

**சரவணு ஸ்ருடியோ**

புகைப்படக் கலையகம்

நல்லூர் மார்க்கட், : : கல்வியங்காடு.




இது இலக்கிய யுகம். எல்லாரிடத்திலும் இலக்கியம் பற்றிய சிந்தனைகள் ஆழமாகவோ, மேலோட்டமாகவோ அமைந்திருப்பதுடன், சில தத்துவார்த்தக் கோட்பாடுகள் அவரவர்க்கமைய இலக்கியரீதியிலும் அமைந்துள்ளன. இதன் காரணமாக இலக்கிய ஆற்றிலே 'சலசலப்பு' இன்று மிகுதியாக எழுந்துள்ளது. இது வெறும் சலசலப்பாக இராது, சில சமயங்களில் பேரோசையாகவேஎழுந்து இலக்கிய உலகை ஆக்கிரமித்துவிடுகின்றது.

இந்த இலக்கியச் சலசலப்பு உண்மையிலேயே இலக்கிய பூர்வமான, ஆக்க வளர்ச்சியைக் காட்டுகிறதா? அல்லது வெறும் பயனற்ற வெற்றோசையா? இக்காலத்திற்கு மட்டும்தான் இந்தச் சலசலப்புச் சொந்தமா? அல்லது எக்காலத்திலும் இது நிலவி வந்திருக்கிறதா?

இதுபற்றி ஒருமுறை க. கைலாசபதி அவர்களுடன் உரையாட நேர்ந்தபோது சில கருத்துக்கள் வெளியாயின.

'இந்த இலக்கியச் சலசலப்பை ஏற்படுத்தி, மிகைப்படுத்தி விடுபவர்கள் உண்மையிலே போலிக் கலைஞர்களே. இவர்கள் இந்தக் கலவரச் சூழ்நிலையில்—குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பவர்கள் போன்று தங்களை உயர்த்திக்கொள்ள முற்படுகிறார்கள். இப்படி உயர்ந்தவர்களிற் சிலர் இன்றும்பெரிய எழுத்தாளர்களாக(!) விளங்குகின்றார்கள்!'—என்ற கருத்தை திரு. கைலாசபதி சொன்னதுடன் மேலும் கூறியதாவது—

'இந்த இலக்கியச் சலசலப்பானது ஒரு குறிப்பிட்ட கால தேச வர்த்தமானங்களைக் கடந்ததாகவே இருந்து வந்திருக்கின்றது என்பதனை வரலாற்று அறிவு படைத்தோர் நன்குணர்வர் அதேபோன்ற ஒரு சலசலப்புத்தான் ஈழத்திலும் இருந்துவருகின்ற போதிலும், இது உண்மையில் ஆக்கபூர்வமான உடனடிப் பலனையளித்துவிடும் என்று கூறமுடியாதபோதிலும், இலக்கியப் பாதையில் இது தவிர்க்கமுடியாத தொன்று இந்தச் சலசலப்பில் சில நல்ல எழுத்தாளர்கள்—அமைதியே உருவானவர்கள் மறைந்து போவது போலவும், 'காளான் எழுத்தாளர்கள்' தோற்றமாவது போலவும் ஒரு தோற்றம் தென்படும். ஆனால் உண்மையிலேயே அவை இறுதியில் போலிக் கலைஞர்களின் அழிவாகவே அமைந்துவிடும்.'

இதையொத்த கருத்தையே சமீபத்தில் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த 'தேவன்-யாழ்ப்

பாணம்' அவர்களும் தெரிவித்தார்கள்.

இரு வேறுபட்ட முரணன இலக்கியச் சித்தாந்தம் கொண்ட இருவர் ஒத்தகருத்தினைப் பிரதிபலித்ததைக் கண்ணுற்ற போது எனக்கு வியப்பே மேலிட்டது. இதிலிருந்து ஒன்று புலனாகின்றது ஒவ்வொரு எழுத்தாளரும் தத்தமது இலக்கியத் தத்துவார்த்த கொள்கையிலே ஈடுபாடு கொண்டவர்கள் என்பதும், அவை 'சாசுவதம்' என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள் என்பதும் புலனாகியது மேலும், இலக்கியச் சித்தாந்தக் பற்றிய புறச் சிந்தனைகளில்தான் வேற்றுமைகள் காணப்படுகிறதே யொழிய, அகச் சிந்தனைகளின் அடிப்படையிலே நாம் உணரக்கூடியதான ஒற்றுமை நிலவுவதையே காண முடிந்தது. ஆகவேதான்—எழுத்தாளர் யாவரும் ஒரு குடும்பத்தினர் என்று கூறுகிறார்களோ?

எழுத்தாளர்களிடையே கருத்து மோதல்கள் இருக்கட்டும்; நல்லொளி பிறக்கட்டும்; மக்களுக்குத் திசை காட்டும் தீபஸ்தம்பமாகட்டும். அதனைவிட்டு 'கர்த்தாக்கள்' மோதிக் கொள்வது இலக்கிய உலகிற்குப் பெருமையளிப்பதன்று. என்ன இருந்தாலும் நாம் சகோதரரன்றோ.

இதனால்தான் மக்கள் சீனப் பெருங் கவிஞன் மா. சே. துங் கூட 'ஆயிரம் மலர்கள் மலரட்டும்!'—என்று தனது அரசியல் சித்தாந்தத்திற்கு மாறாகக் கூறினான்...!

இதனை நம் நாட்டு வாசகர்களும் எழுத்தாள நண்பர்களும் மனதிற் கொண்டார்களாயின், ஈழத்தின் இலக்கிய உலகு பீடுநடை போடும். ஆனால்—?

எழுத்தாளர்களை வளர்ப்பதிலும் இலக்கியத்தை ஏற்றம் பெறச் செய்வதிலும் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்குண்டு. பத்திரிகைகளின் இலக்கியத் தொண்டே எழுத்தாளர்களின் நம்பிக்கை. இத்தகைய புனிதத் தொண்டிலும் சில சமயங்களிற் கறையேற்பட்டு வருகிறது...எழுத்தாளர்களின் 'குடும்பச் சண்டை' சில சமயங்களில் ஆக்ரோஷ மிகுதியில் 'தெருச் சண்டையாக' மாறிவிட, வேடிக்கைபார்ப்பவர்களாகச் சில சமயங்களில் பத்திரிகைகள் மாறிவிடுகின்றன. அதனால் எழுத்தாளர்களின் எழுத்துச் சண்டை, மற்போராக மாறி—பாரம்பரியத்தையே குத்திக் கிளறிப் பார்க்கும் விரசமான செயலாக மாறிவிட இலக்கிய உலகு நாற்றம் பிடித்த சாக்கடையாகின்றது. இது சில பத்திரிகைகளுக்கு 'விடயதான'மாகவோ, 'செய்தி'யாகவோ இருக்கலாம். ஆனால்—அதன் விளைவு எத்தகைய பாரதூரமானது என்பதனை இலக்கிய உலகே நன்கறியும்.

சில ஒழுத்தாளர்களின் 'எழுத்'துக்குப் புறம்பான 'சங்கதி'களுக்குப் பத்திரிகைகள் தூபம் காட்ட—

## (வக்) கீல் வாதம்!

ஒரு வக்கீல்: திருடர்கள் தங்களுக்குள் நாணயமாக நடந்து கொள்கிறார்கள் என்பதெல்லாம் பொய்.

இன்னொரு வக்கில்: அதெப்படி முடியும். அவர்களும் நம்மைப் போலத்தானே!

எழுத்தாளர்கள் தங்கள் அமர இலக்கிய சிருஷ்டிகளுக்குச் செலவிட வேண்டிய சக்திகளை, ஒருவரை ஒருவர் 'மட்டம் தட்டுவதில்' செலவழித்து வீணே சுய இன்ப மலட்டுத்தனம் அடைகின்றனர். யனிதன் என்கின்ற எந்தவொரு கோணத்திலும், ஒருவன் தனது சக்தியை வீணே இழப்பதுஒரு தேசிய நட்டம் என்பதனை உணரவேண்டும். எழுத்தாளன் தனிமனிதனல்லன். அவன் சமூகத்தின் பிரதிநிதி. அவனது அர்த்தமற்ற வீண ஆவேசசக்தி இழப்பால் ஒரு பெரும் சமூகத்தின் நல்வாழ்வே தடைப்படுகின்றது எனபதனை ஒவ்வொரு பொறுப்புள்ள எழுத்தாளனும், பத்திராதிபர்களும் நன்குணரவேண்டும்.

மேலும்-ஈழத்தைப் பொறுத்தவரை பத்திரிகைகளே இலக்கிய வெளியீட்டின் களமாக அமைந்துள்ளன. தனிநூல் வெளிவரவோ, விற்பனையாகவோ இயலாத நிலையில் பத்திரிகையாளர்களே ஈழத்து இலக்கியத்தின் துலாக்கோல்கள். ஈழத்து இலக்கிய வளர்ச்சியை அவதானித்தால்—நவீன இலக்கிய வளர்ச்சிக்குப் பத்திரிகைகள் அதிக தொண்டாற்றியிருப்பதை அவதானிக்கலாம். ஆனால்—சமீபகாலங்களிலே நமது பத்திரிகைகளின் இலக்கியப் பக்கங்களில் அதிகமாக நல்ல சிருஷ்டிகளைக் காண முடிவதில்லை. இதற்கு நாம் எழுத்தாளர்களைக் குற்றம் கூற முடியாது. நமது (தினசரி) பத்திரிகைகளில் இலக்கியக் கவனம் குறைந்தமையே காரணம் எனலாம்.

இலக்கியப் பக்கங்களுக்கு விடயங்களைத் தெரிவு செய்யும் பொறுப்பினை—அதிக இலக்கிய அறிவு அற்றவர்களும், 'அப்பிரண்டிசா'க வேலை பழகுபவர்களும பெற்றுவிடுகிறார்கள். இவர்களுக்கு இலக்கிய கனத்தை அளவிடும் ஆற்றல் மிகக் குறைவு. காரணம், அனுபவமற்ற இளைஞர்கள்! ஆதலால், தகுதியற்ற பதவிநிலையால் சில உன்னதமான கதைகளைக் கூட நிராகரித்துவிடுகின்றனர்.

உதாரணமாக, ஈழத்தின் பழம் பெரும் எழுத்தாளர் ஒருவர் கதையொன்றினைத் தினசரியின் வாரப் பதிப்புக்கு அனுப்பியிருந்தார். அது உடனடியாக மறுக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்படவே, அவர் இன்னோர் மாதப் பத்திரிகைக்கு 'மாற்றுப் பெயர்' ஒன்றில் வெளியிட்டார். அதற்கு ஏகப்பட்ட புகழ்மாரி. அவரது இலக்கிய விரோதிகள் கூட மாற்றுப் பெயரின் காரணத்தாலும் கதை உயர்வின் காரணத்தாலும்!'—கடந்த வருடங்களில் வெளியான சிறுகதைகளில் தலையானது!'—எனப் பாராட்டினார்களாம். அத்தகைய ஒரு சிறந்த சிருஷ்டி திருப்பியனுப்பப்பட்டால்... இலக்கிய உலகம் எனாவது?

முதுபெரும் எழுத்தாளர் இன்னொருவர் நீண்ட காலமாகவே மெளனமாக இருந்து வருவதற்கும்—இத்தகைய இலக்கியக் கணிப்பு மதிப்பீடே காரணம் எனக்கூறுகிறார். எனவே பத்திராதிபர்களே பொறுப்பும், கடமையும் உங்களுக்கு அதிகம். இலக்கியம் வாழவேண்டும். சிறப்புப் பெறவேண்டும் என எண்ணினால் விழிப்புடன் செயலாற்றுங்கள்.

தொடர் நாவல்:

# கர்ப்பக் கிருகம்



"செம்பியன் செல்வன்"

## 2.

### மனிதம்.

இறைவனின் கருவறையிலிருந்து, ஒளிப் பூவாய்ச் சிதறும் உயிரணுத்துணுக்குகள், ஆதிஅநாதியாகக் ககனவெளியினிலே அந்தரத்தினந்தரமாகக் கனத்து ஊசலாடி அலைப்புற—பாவாத்மா, புண்யாத்மா என்ற வேறுபாடின்றி தாம் ஜனித்த வழியின் தூய்மைக் கனவின் உறைவிடமாய், இன்னோரிடத்தை நோக்கி அசைகின்ற தவிப்பில், தாயின் கர்ப்பம் ஜெகஜ்ஜோதியாக மின்னி ஈர்க்க, உயிர்க்குலங்கள் வேகமாகச் சென்று உறைந்து, வானத்தரசனின் உள்மூச்சை, தாயின் உயிர்மூச்சாக்கி, பிரணவத்தை ஜபித்து பிண்டமாகிச் சமையவே உலகம் இயக்கம்பெறுகின்றது.

அந்த இயக்கத்தின் பெருக்கத்தால் மண்ணில் ஜனித்த உயிர் வள்ர்ச்சியின்—உடல் பெருக்கத்தில் தான் எத்தனைவண்ணங்கள்...... குணங்கள்... மணங்கள்... அழகுக் குரூரங்கள்......

தூய்மையாக ஜனித்த இவை மாசு பட மண்மாதாதான் காரணமா?...

மண்ணுலகின் உயிர் வேட்கையின் ஆசையின் ஆசையால்...

உயிரின் பரிணமத்துக்கும் வித்தாகி—வித்தே வினையாகி அழிவாகி எஞ்சுகின்றனவா?

அவர் உடல் ஒருமுறை கட்டிலிற் புரண்டு கொடுக்கின்றது. கட்டில் அவரின் உடல் உபாதை நெளிவுக்கு, வளைந்து கொடுக்கும்போது 'கிரீச்'சிடுகின்றது. வேறெந்தவித ஓசையும் எழவில்லை. கட்டிலின் கிரீச்சென்ற ஓசையே அவரது துயிலைக் கலைத்துவிட, மெல்லக் கண் மலர்ந்தார்.

## கண்டுபிடிப்பு!

கல்யாணஞ்செய்து பல ஆண்டுகள் ஆகியும் அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அவர்கள் காட்டாத டாக்டரில்லை, சுற்றாத அரசமரமில்லை, தரிசிக்காத ஆலயங்களில்லை. நீண்ட நெடுநாள் மூளையைக் குடைந்து ஆராய்ந்த பின் "இன்று போல் என்றும் வாழ்க" என்று அவர்களின் திருமணத்தின்போது அனைவரும் அளித்த வாழ்த்துக்கள்தான் காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டது.

—ச

அப்போது காகம்கரையவில்லை, கோழி கூவவில்லை. அதில் அவருக்கு ஒரு திருப்தி. 'என்ர நித்திரையை இந்தக் கோழியளும், காகங்களும் கலைக்கிறதா? முடியுமா அவற்றால்? சுட்டுத் தொலைச்சிடமாட்டனா?'—என்ற பெருமித உணர்வில்—

'டங்!'...என்ற ஓசை எழுப்பி, நேரம் எட்டரை காட்டிய சுவர்க்கடிகாரம் அவர் கவனத்தைக் கவரவில்லை. கவனித்திருந்தால் 'இந்த வேளையிற் போய்க் காகம் கரைய அதுவும் என்ன மதம் கொண்ட, வேலை கெட்ட மானிடனா?...' என்ற எண்ணம் ஒருவேளை அவர் மனதில் எழுந்திருக்குமோ என்னமோ?...

"அக்கா!...அக்கா!..." என்று மெல்லக் குரல் கொடுக்கிறார்.

"தம்பி!—எழும்பிட்டியே!...இந்தா வாறன்!...கொஞ்சம் பொறு!—என்ற குரல் வெளியிலிருந்து கேட்கின்றது.

மெல்லக் காலை நீட்டி, உடலை வாகாகக் கிடத்தி, தலையணையை உயர்த்தித் தலையைப் பதிக்கும் போது, விழிகளின் பார்வை சுவர்க் கலண்டரில் விழுகின்றது.

'கோபியர் பின்னலைப் பின்னின்றிழுக்கும் மாயவனின் லீலை!'

நெஞ்சத்தளத்தில் குறும்பு நெளிந்தது.

'கண்ணா!...நீ ஆடாத, ஆடிக் காட்டாத விளையாட்டா?......நானும் உன்னைப் போல ஒரு கண்ணன் தாண்டா!...'

"என்ன தம்பி!...நீ என்ன உனக்குள்ளேயே சிரிக்கிறாய்?...என்னட்டயும் கொஞ்சம் சொல்லன் நானும் சிரிக்கிறன்!..."

"வா!...அக்கா!..."

"எழும்பி ஒருக்கா வாயைக் கொப்புளிச்சுப் போட்டு இந்த முட்டைக் கோப்பியைக் கொஞ்சம் சூடாகக் குடி...அப்பதான் உடம்புக்கு நல்லது!..."

அவர் படுக்கையிலிருந்தே செம்பு நீரை வாங்கி, யன்னல் திரையை எட்டி நீக்கி, வெளியே வாயைக் கொப்பளித்துவிட்டு முட்டைக் கோப்பியின் நுரையை மெல்ல ஊதி கோப்பையின் விளிம்போரம் ஒதுக்கி உதட்டை உறிஞ்சிக் குடிக்கிறார்.

'ஆ!...என்ன சுகமா இருக்கு! முட்டைக் கோப்பி எண்டால் இது தான் முட்டைக் கோப்பி!...'

அவரைப் பார்த்துக் கொண்டிருந்த வள்ளிப்பிள்ளை பெருமூச்சு விட்டாள்.

"என்னணையக்கா!...சும்மா பெருமூச்சுவிடுறா? ... என்னண்டு தான் சொல்லன் எனக்கும்!..."

"இந்தப் பெரிய வீட்டையும் மாளிகை போலக் கட்டி அதில

நீயும் நானும் மட்டும் குடியிருக் கிறதை நினேச்சாத்தான் எனக்கு மனசுக்க என்னமோ செய்யிது!..."

"அதுக்கென்ன செய்யிறதக்கா? உன்ர அவர்தான் எப்பவோ போட் டாரே! எப்பவோ போனவரைப் பற்றி இப்பநினேச்சு என்னக்கா செய்யிறது!... அவரும் போகேக்க படுகிழவராகத்தான் போனவர்!"— அவர் குரலில் குறும்பு தட்டுகின் றது.

"போடா!...உனக்கின்னமும் விளேயாட்டுப்புத்தி. நான் வாழ்ந்து கெட்டவ...இனி எனக்கெண்டு ஒரு சுகமே!...நீதான் அண்டைக்கு மாதிரி இண்டைக்கும் தனிமரமா நிக்கிரு...உனக்கெண்டு ஒரு புள்ளே குட்டியிருந்தா இந்தவீடு எவ்வளவு கலகலப்பாக இருக்கும் தெரியுமா?"

"என்னக்கா சும்மா கல்யாணம் கல்யாணமெண்டு அலட்டுருய்... இப்ப எனக்கு கல்யாணமில்லாம என்ன குறைஞ்சுபோச்செண்டு கேக் கிறன்..."

"அதுக்கில்லத்தம்பி! ... என்ன இருந்தாலும் சொந்தத்தில மனேவி எண்டு ஒருத்தி இருந்தா, அது வின்ர நிலேயே வேறல்லே!..."

"ஓமோம்!...அதுக்கு என்னே என்ன செய்யச் சொல்லுருய்!...... நான் ஒரு தொய்வுக்காரன் எண்டு தானே எனக்கு அப்ப ஒருவரும் பெண் தரமாட்டினம் எண்டு சொன் னவை...இப்ப ஒரு மாதிரித் தொய் வுக் குணம் குறைஞ்சிருக்கு...ஆனு வயது நாப்பதுக்கு மேலாப் போச்சு ...இப்ப போய் பொம்பிளே வேணு மெண்டா ஊரார்கள் சிரிக்காயின மே!...

## சோ'திடம்'!

சோதிடர்: என் ஜோசியம் என்றுமே பொய்த்ததில்லே. பலித்தபின் நேரில் வந்தே என்னேப் பாராட்டப் போகி றீர்கள். நம்பாவிட்டால் அந்த நேரத்திலேயே பணத்தை யும் கொடுங்கள்.

செட்டியார்: அப்படியானுல் நான் எப்போது இறப்பேன்? சொல்லுங்கள் பார்ப்போம்.

—மு. க.

"இதுவும் ஒரு வயதே!... உனக்கிருக்கிற நிலேயில, செல்வாக் கில யாரும் பெண் கொடுக்கத் தயங் குவினமே!...நானுந்தான் எவ்வளவு நாளுக்கு உன்னேப் பாக்கமுடியும்... நாளேக்கு நானும் போயிட்டா...நீ பாவம் அந்தரிச்சுப் போயிடுவா!..."

'அக்கா சொல்லிறதிலும் ஞா யம் இருக்கு!'

"சரி சரி...இன்னும் படுக்கையி லயே கிடக்கப் போருய்...காலமை சாப்பிர்றதில்லேயே!... படுக்கையிலே நெடுகக் கிடக்காதை...பித்தம் தலேக் கேறிவிடும்..."—அவள் அறையை விட்டு வெளியேறுகின்றபோது அவர் குரல் கேட்கிறது;

"...அவன் சிவராசா வந்து திறப்பு எடுத்துக்கொண்டு போனவ னே யக்கா?..."

"ஓ!...அவன்வெள்ளணத்தோட வந்து திறப்பு எடுத்துக்கொண்டு கடை திறக்கப் போட்டானே!..."

"அப்ப சரி!...சரி!..."—என்ற படி எழுந்து, கிணற்றடிப் பக்கம் காலேக் கடன் முடிக்கப் போகிருர்.

"இந்தவட்டாரத்துக்க என்ரவீட்டிலதான் குழிக்கக்கூஸ் இருக்கு. சும்மாவே ஐம்பதினுயிரத்தைக் கொட்டியெல்லேவீட்டைமுடிச்சிருக்கிறன்... எல்லாம் கொழும்பு பிளானில!..."

அவர்கூட நினைத்திருக்கமாட்டார். தான் இப்படி உயர்வேனென்று!...ஆரம்பத்தில் வீட்டு வளவு வேலியைப் பிரித்துப்போட்ட பெட்டிக்கடை இன்று அந்தப் பெரிய நாற்சந்தியில் ஒரு பெரிய சங்கக் கடையாகப் பத்துச் சிப்பந்திகளுடன் விளங்குவதுடன், பிரதான கூப்பன் கடையாகவும் விளங்குகிறது.

தம்பிஐயா கூப்பன் கடை என்ருல் பிரசித்தம், என்ருலும் தம்பி ஐயரின் உயர்வும் மிகச் சமீபகாலத்தில்தான் ஏற்பட்டது. அதுவும் அவரது கூப்பன் கடையால்தான் அவர் உயர்ந்தார் என்பதும் ஒரு கதை. முன்பு அவரே தன் கடையின் முதலாளி; சிப்பந்தி எல்லாம். இன்று அவரது கடையிலே பத்துப் பேர் வேலை செய்கின்ருர்களென்ருல் அதற்கும் அவரது கைத்திறமையே காரணமாகும். ஆமாம்; அதுதான் அவரது கைவிசேஷம்.

மனுஷன் கை மூன்று கொத்து அரிசியைக் கண்முன்னுலே படியில் நிரப்பி, வெட்டுக்கோலால் ஒரு இவட்டு வெட்டி, உயர்த்திக் குலுக்கி அளந்துவிட்டார் என்ருல்...

வீட்டில் கொணர்ந்து அளந்தால்—அள்ளாமல்விள்ளாமல் இரண்டரைக் கொத்துத்தான் கிடைக்கும். இந்தக் கைத்திறமைதான் அவரது கடைவளர்ச்சியுறவும், அவரது வீடு அன்னவாசா—எழவும் காரணமாகியது.

"அன்னவாசா" என்பது 'அரிசி வாசா' வாக இருந்தால் இன்னும் மிகப் பொருத்தமாக இருக்கும். பாவிப்பயல் அரிசியாலேயே வீட்டைக் கட்டிட்டானே!...' என்று ஊர்பொருமுவதில் அர்த்தமில்லாமலில்லை.

அத்துடன் 'கிட்டிணர் வளவு'ப் பராமரிப்பும் அவரிடம் வந்து சேரவே—கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக் கொட்டியதாயிற்று.

பிரதானவீதியுடன், கிழக்கே இருந்து வருகின்ற ஒழுங்கை சங்கமமாகி, ஏற்படுத்துகின்ற மூலை முடக்கிற் பன்னிரண்டு பரப்புக் காணியை உள்ளடக்கிக் கொண்டு—தோட்டம் துரவுமாக விளங்கும் காணிதான்—'கிட்டிணர் வளவு'. அந்தக் காணி பழைய முறைப்படி காலாகாலமாகப் பராமரிக்கப்பட்டு வந்ததால் தென்னை, பலா, மா, எலுமிச்சை எனக் 'கிளிகொஞ்சி விளையாடுமிடம். கிட்டிணர் ஒருகாலத்தில் மிகப்பிரபலமாக யாழ்ப்பாணத்தில் விளங்கியவர். தென்னிந்தியாவிலிருந்து முதன் முதலாகச் சின்னமேளக்காரிகளைக் கொண்டுவந்தவர் என்ருல் அவரின் கீர்த்தி எப்படிப்பட்டது என்று சொல்லவும் வேண்டியதில்லை. அந்தக் கீர்த்தியே அவரை அநாதையாக்கி, அவரது வளவையும் பலரின் கைக்கு மாறவைத்துவிட்டது. ஆயினும் யார் அந்த வளவை ஆண்டாலும் பெயர் என்னமோ இன்று வரை 'கிட்டிணர் வளவு'தான். இந்த வளவின் மூலம் கிட்டிணர் சிரஞ்சீவிதான்.

இன்று இந்தவளவுக்குச் 'சீதன வழி'யால் உரிமையாளரான இரத்தின சபாபதியோ கொழும்பு வாசி. உயர்தர உத்தியோகத்தராகக்

கொழும்பிலே கடமையாற்றி இன்று அவர் ரிடையர்ட்' ஆகி விட்டிருந்த போதும், அவரது பிள்ளை, குட்டி சுற்றம் எல்லாம் கிணற்றைச் சுற்றிய பூசணியாகி, கொழும்பைச் சுற்றியே படர்ந்து விட்டது. அவர் யாழ்ப்பாணப் பக்கம் வருவதே அரிது என்பதுடன்—வருவது அநாகரிகம் என்ற மனப்பான்மையும் ஊறிவிட்டது 'யாழ்ப்பாணத்தில் என்ன கிடக்கிறது. வரண்ட பூமி! இதைப் போய் என்ன பார்க்கிறது?'

எப்பவாவது ஆடிக்கொருக்கால், ஆவணிக்கொருக்கால் வேறு ஏதாவது அவசரகாரியமாக வரும்போது மட்டும் தம் வளவை வந்து பார்த்துப் போவார். அப்படிக் கனகாலத்துக்குத் தமது வளவையே பார்க்காமலிருந்துவிட்டால்—அந்த வளவின் மீதிருக்கின்ற உரிமை போய்விடுமாம். அரசாங்கமே தனக்குச் சொந்தமான பொதுச் சொத்துக்களில் அந்த வித உரிமையைப் பாராட்ட வேண்டியிருக்கும்போது, அவர் எம்மாத்திரம்?...

ஆகவே, தாம் அடிக்கடி வந்து தம் வளவைப் பார்க்கமுடியாது என்றும் வளவை மேற்பார்வை செய்து, மாதாந்தர வருமானத்தைத் தனக்கு அனுப்பி வைக்கும் படியும்—தம்பிஐயாவை வந்து கேட்ட போது அவர் மெய்மறந்தார்.

'நிச்சயமாக, உங்களுக்கு இல்லாத உதவியா... அயலுக்கை இருந்து கொண்டு இதுகூட நான் செய்யாட்டி எப்படி?...நீங்க ஒண்டுக்கும் பயப்படாதைங்க...மாதம் மாதம் வாடகைப் பணத்தையெல்லாம் வாங்கி ஒழுங்கா உங்களுக்கு அனுப்புறன்...சரிதானே...'...என்று சொன்னபோது இரத்தின சபாபதி மனநிறைவுடன்தான் கொழும்புக்குப் போனர்.

தொடங்கிவிட்டது இங்கு தம்பிஐயா அவர்களின் ஆதிக்கம். கிட்டிணர் வளவில் அவரிட்டதுதான் சட்டம். அவரின் சொல்லே தேவவாக்கு. இதனாலும் அவர் பொருளாதார நிலை இன்னும் ஒரு படி உயர்ந்தது.

இரத்தினசபாபதியின் கணக்குப்படி தனது வளவின் மாதாந்த வருமானம் எழுபத்தைந்து ரூபா என்ற நினைப்பு. ஆனல் சில சமயங்களில் மாதாந்த வருமானம் ஐநூறையும் தாண்டி விடுவது தம்பிஐயாவுக்கு மட்டும்தெரிந்த இரகசியம். தென்னை மா, பலா சிலிர்த்துக் காய்த்தால்... பணம் பொன்னகக் கொட்டாதா?... எதற்கும் வேலைக்காரனை 'மார்க்கெட்டுக்'கு அனுப்பும் இரத்தினசபாபதிக்கு இது எங்கே புரியப் போகின்றது?

---

## உரிமைக்(கு)யூ!

சினிமாத்திரையில் பின்வரும் செய்தி காட்டப்பட்டது:

'ஒரு பத்துருபாய் நோட்டு டிக்கட் கொடுக்குமிடத்தில் கண்டெடுக்கப்பட்டது உரியவர் டிக்கட் கொடுக்குமிடத்திற்கு வரவும்.'

உடனே கதிரைகளனைத்தும் காலியாகின டிக்கட் கொடுக்குமிடத்தில் ஒரு நீண்ட 'கியூ' உருவாக்கப்பட்டிருந்தது.

—மு. க.

பிரதான வீதிப் பக்கமாக இரண்டு பரப்புக் காணியைப் பிரித்து வேலியடைத்து, விறகுகாலை வேலாயுதத்திற்கு வாடகைக்கு விட்டிருந்தார். இந்தச் செய்தி இரத்தினசபாபதிக்கு இன்னும் தெரியாது. தெரிந்தால் தான் என்ன? இந்த மாதம்தான் இப்படி வாடகைக்கு கொடுத்திருக்கிறன் என்றால் போச்சு! ... சும்மாவே!...சுளையா மாதம் எழுபத்தைந்து ரூபாயெல்லே!

உள்வாங்கிய மற்றப் பகுதியிலே தான் கமலம் போன்றோர் குடியிருக்கும் நாற்சாரவீடு அமைந்திருக்கிறது. அதிலேதான் எத்தனை வித மான வீடுகள்...குடும்பங்கள்...மனிதர்கள்...சாப்பாட்டுக்கடையிற் சமையலாளாக இருக்கும் கணபதி... சினிமாக் கொட்டகையில் வேலை பார்க்கும் சிங்காரம்...விறகு காலையில் விறகு பிளக்கும் விஞசித்தம்பி பண்ணை அலுப்பாந்தியிற் கடலை விற்கும் 'குளறி சின்னம்மா,—இவர்களின் குடும்பங்களின் குசைக் கோவிலாக விளங்கும் ஒவ்வொரு 'அறையும், சங்கக்கடை ஐயாவின் பொன் காய்ச்சி மரங்கள்.'

ஒவ்வொரு குடும்பமும் தனது அறையினளவுக்கு ஏற்ற வாடகையைக் கொடுக்கின்றது. பெரிது இருபது; நடுத்தரம் பதினைந்து; சிறியது பத்து இப்படி. ஆனால் இவற்றிலும்விதிவிலக்கு இருக்கிறது. அது சங்கக்கடைஐயாவின் பிரீதிக்கு ஏற்ப நடப்பதைப் பொறுத்து இருக்கின்றது. இந்த உபகாரம் மட்டுமல்லாமல், தானும் இரண்டு மூன்று என்றெல்லாம் உதவுவார்.

இப்படி இவர் உதவுபவர்களில் இருபதுரூபா வாடகை அறையிலிருக்கும் சிங்காரம் குடும்பமும் ஒன்று. சிங்காரத்தின் கடைசி மகன் தன்னைப் போலிருப்பதில் உள்வாங்கிய மகிழ்ச்சி. அவன் தன்னை மாமா என்று அழைக்கும் போதெல்லாம் ஒரு நமட்டுச் சிரிப்பு அவர் இதழ்களில் விளையாடும். சிங்காரத்தின் மனைவி வாலிபமும் யௌவனமும் பொருந்திய காலத்தை உணர்ந்த பெண்ணுதலால், அவர்கள் சுக துக்கங்களில் இவருக்கு அதிக ஈடுபாடு.

'அவன் இரவு பகலெண்டு சினிமாக் கொட்டகையில உழைக்கிறன் பாவம். வருமானம் பத்தாது தான். அதுதான் எப்படி இருக்கிருய் எண்டு பாத்திட்டுப்போகலாம் எண்டு வந்தனுன்!...'—என்று அவர் அசட்டுச் சிரிப்புடன் இரவு பத்துமணிக்குமேல் வந்து நிற்பார். பின் போய்விடுவார். இதனுல் அவர் அவர்களிடம் வாடகையை அறவிடுவது இல்லை என்பது 'கிட்டிணர் வளவு' அறியாத இரகசியமல்ல

'குளறி சின்னம்மா'வுக்கு அவர் ஒத்தாசை செய்யப்போய், அவளது வாய்வீச்சுக்கு அஞ்சி, நடுநிசியில் மற்றவர்கள் பரிகசிக்க விழித்தது ஒரு சுவாரஸ்யமான கதை. அவரின் முதுகுக்குப் பின்னுல் அந்தக் கதையைச் சொல்லி இரசித்து ஏளனம் செய்வது அவருக்குத் தெரியாததல்ல. ஆயினும், 'அவளுக்கு உதவி செய்யப்போன என்னைத் தவருகப் புரிந்து கொண்டுவிட்டாள்!' என்று மற்றவர்களுக்குச் சவடால் அடிக்கவும் அவர் அஞ்சவில்லை.

சின்னம்மா ஒரு விசித்திரப் பிறவி. உலகமே அவளுக்குத் துச்சம். ஏதோ காலடியில் நெளியும் புழுவாகத்தான் அவளுக்கு உலகம் தென்பட்டதோ?

நல்லது கெட்டது—என்பவற்றிற்கு மனிதன் கொடுக்கின்ற தானமும், கெட்டதற்கு மறைவு, திரையெல்லாம் அமைத்து நடத்தி விட்டு வெளியே நல்லவன் போல்

நடக்கின்ற ஆஷாட பூதித்தனமும் அவளை வெறிகொள்ள வைக்கும். எல்லாவற்றிற்கும் அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களே காரணமாக இருந்தன.

அவள் மலடி என்ற காரணத்திற்காக, அவள் புருஷன் அவளை விட்டு விட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒருத்தியின் ஓடியதும், ஒடிய அங்கும்—விளைநிலத்தை விட வித்தே தவருனது என்பதனை உணர்ந்தும், இவளை முற்றாக நிராகரித்தமைக்குக் காரணம், மலட்டு அபவாதத்தைவிட, புதியவளின் ஜாலச்செய்கையும், காலையில் மலர்ந்து, மகரந்தம் இழந்து உச்சிப் போதில் விளங்கும் மலரைவிட, மாலையிலே மலர்ந்து மணம் வீசும் பிச்சிப்பூவே பெரிதென்ற மனமயக்கமுமே!

அவளுடைய உள்ளத்திலே இருந்த எல்லாப் பசுமை உணர்ச்சிகளையும் அவனின் செய்கை கொன்றுவிடவே—அவளுக்கு மனித குலத்தின் நயவஞ்சகப் பூச்சு மறைப்புகளினூடே வெளிக் கிளம்பும் இரணநாற்றம் பொறுக்க முடியாது போய்விட்டது.

'டேய்!... நீ போய் எவளாவது நாத்தங்கெட்டவளோட இருந்து நல்லாவாழ்...ஆனு நீ தாலி கட்டின தோசத்துக்காக, நான் பெண்ணுப் பிறந்துவிட்ட பாவத்துக்காக...இன் னெருத்தனேட போய் வாழமாட்டேன். உன்ர உழைப்புக்குக்கூட நான் பங்குக்கு வரமாட்டேன்... ஃப்படி வந்தா...அது உன் வாழ்விலேயே பங்கு கேட்டமாதிரி...உன்னைப்போல நன்றிகெட்டவனேடை இன்னும் வாழாம, நீயாக அறுத்துக் கொண்டுபோய் எனக்கு நல்லதே செய்திட்டாய்...நான் பெண்ஜன்மம் தான்...ஆனு எனக்கு கடவுள் கொடுத்த இரண்டு கையும், இரண்டு காலுமிருக்கேக்க உன்ர சம்பாத்தியத்தை இங்க நாயும் கேக்காது!...' —என்று சொல்லியனுப்பியவள் ஏற்றுக்கொண்ட வேலைகள்தான் கொஞ்சநஞ்சமா?

கூலிக்கு மண் சுமந்திருக்கிருள்; கடலை விற்றிருக்கிருள்; அலுப்பாந்தியிலே வந்திறங்கும் ஓடுகளை, மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கியிருக்கிருள். ஆணேடு ஆணுகநின்று உடலை வருத்தி உழைத்திருக்கிருளே ஒரு பிள்ளை அவளைக் கெட்ட எண்ணத்துடன் நெருங்கியிருக்க முடிந்ததா?

அவளது உடலைக் கொன்ற உழைப்பு, அவளறியாமலே எப்போதாவது தலைநீட்டும்—பூநாகமான நச்சு எண்ணங்களைக் கொல்லவே, தன்னை மறந்த அயர்ந்த தூக்கத்தில் அவள் தூய்மையின் மெருகேறிக் கிடக்கலானுள்.

நெஞ்சிலே நெருப்பின் கனலை வைத்து, தனது ஏமாற்றப் பெருமூச்சுகளினுல் அதனைக் கனியக் கனிய வைத்துத், தீப்பிளம்பாகி மின்னினுள். அத்துடன் அவள் தன்னை யாரும் நெருங்காதவண்ணம் வாயையும் வளர்த்துக்கொண்டாள்.

அவளின் குரல் பலமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டால் ஒருவனும் அவளை நெருங்கமுடியாது. இன்ப துன்பங்களைக் கடந்துவிட்ட யோகியின் நிலையில் சொற்கூட்டங்களின் கனம், சுத்தம், அசுத்தம் என்பவற்றை எல்லாம் கடந்துநின்று வார்த்தைகளை அள்ளி வீசுவாள். அந்த நிலையில் எவன் அவளை நெருங்கமுடியும்.

அதேபோன்று யாராவது தவருக ஒழுங்கீனமாக நடக்கிருர்கள் என்று கண்டுவிட்டால் போதும்—அவர்கள் எந்தப் பெரிய 'விண்ணுதி விண்ணர்'களாக இருந்தாலும் சின்னம்மாவின் சுடுசரத்திற்குத் தப்ப முடியாது. தீமையை ஒழிக்கவந்த இராமபாணமாகிவிடும். பகையை ஒழிக்கவந்த முருகன் வேலாகிவிடும். அதனுல் அவள் பெயரே குளறி சின்னம்மா ஆகிவிட்டது.

கமலத்தின் அடுப்படிக்குள் நுழைந்த தம்பிஐயா அவர்களும் முன் எச்சரிக்கையுடன்தான் வந்திருந்தார். கமலத்தின் அடுப்படிக்குப் பக்கத்திலிருப்பது சின்னம்மாவின் அடுப்படிதான். அங்கு அவளைக் காணவில்லை. இதுதான் தருணம் என நுழைந்துவிட்டார். அவர் நீண்ட நாளாகவே கமலத்தின்மேல் கண் வைத்திருந்தார். அவள் கணவனை நினைத்து எட்டவேஇருந்தார். அவள் கணவன் நோய்வாய்ப்பட்ட சமயம் பெருமனது கொண்டு வலியவே சென்று உதவமுனைந்தும்—அந்தப் பாக்கியத்துக்குக் கமலம் இடம் கொடுக்கவில்லை.

இன்று கமலம் வேலியில்லாப் பயிர் என்ற துணிவுடன் நுழைந்துவிட்டார்.

''அடடா!... நிலத்தில் வீணை ஊத்திப் போட்டியே...எனக்குத் தந்திருந்தாலும் காசாவது தந்திருப்பன்!...எதுக்குச் சும்மா பதறிக் கொண்டிருக்கிறாய்!...கமலம் இப்படித்தான் ஒரு வாடிக்கைக்காரரை உபசரிக்கிறதா? மெய்ய கமலம் இப்ப என்ன எனக்கு வைச்சிருக்கிறாய்?...''—அவரது வாய் ஏதேதோ உளறிக் கொண்டிருக்கிறது. கமலம் என்ற பெயரை உச்சரிக்கும் போதெல்லாம் நெஞ்சே இனிப்பது போல அவருக்கு உணர்வு. அவரது கரவுப் பேச்சிலே அர்த்தம் கிளை வெட்டிப் பிரிந்து தொனிக்கிறது.

கமலம் கூனிக்குறுகி, மானவுணர்ச்சியை உள்வாங்கி நெட்டுயிர்த்து நிற்கிறாள்.

''நான் என்ன சும்மா போகவே!...உன்னட்டைப் பலகாரம் வாங்கித் தின்னலாமெண்டு வீட்டகூடச் சாப்பிடாம வந்தா...நீ பேசாம நிக்கிறியே!...''

''வந்து...வந்து...பலகாரம் எல்லாம் முடிஞ்சு போச்சு!...

''அடிசக்கை! ... அப்படியெண்டா!...இப்பவே வியாபாரம் பெரிசா நடக்குது எண்டு சொல்லன்...இனி நீயும் பெரிய முதலாளியாயிட்ட எண்டு சொல்லன்!...''

அவரது கேலிப் பேச்சுக்கள் அவளைச் சிலை உரிய வைக்கிறது. அக்கம் பக்கத்தவர்களைப் பார்த்தாள். அவரவர்கள் தங்கள் கருமத்திலேயே கண்ணாகிக் கிடக்கின்றார்கள்.

'சின்னம்மா எங்க போட்டா?...'

''அப்ப கொஞ்சம் கோப்பி எண்டாலும் தரமாட்டியே!...''—என்று கேட்டவாறு தானே குனிந்து எடுத்து...

''மிச்சம் நல்லா இருக்கு!... இப்படிக் குடிக்கக் கொடுத்தல்லவைச்சிருக்கோணும்...ஓ...ஓ! அப்ப நானும் கொடுத்துத்தான் வைச்சிருக்கிறன்...இல்லையா கமலம்?...''—என்று விஷமத்துடன் கேட்டவாறு ஹெஹ்...ஹே!...என்று வாய்விட்டுச் சிரிக்கவும், வாசலில் குரல் பலமாகக் கேட்கிறது.

''என்ன கமலம்!...படலை சாத்த மறந்திட்டியே!...ஏதோ நாய் புகுந்து சட்டியளை உருட்டுது போல கிடக்கு—சீ!...நாயே! ... வெளியால போ!...தூ!

அவர் முகம் இருண்டது.

துப்பல் தன் முகத்தில் விழுந்தது போல், துடைத்துக் கொண்டு அவசரம் அவசரமாக வெளியேறுகிறார்.

''வடிவாப் படலையைக் கட்டு மீண்டும் நாய் நுழையப் போகிறது!...''—என்றகுரல் அவர் காதிலே விழ, வேகமாக நடக்கிறார்

—வளரும்.

# முருகையன்

# கம்பன் கவித்துவம்!

சென்ற இதழ் 71ஆம் பக்கத் தொடர்ச்சி

காமு கர்கள் விரும்பிடத் தக்கதாய்
கவிதை பண்ணினான் என்றும் ஒருசிலர்
தீமை சொல்லிப் பழிக்க முயன்றனர்
செய்யுள் தேர்ந்தனர், கண்டனம் தீட்டினர்
வாய்மை தன்னைத் திறந்து மொழிவமேல்
வாழ்வில் உள்ளதோர் அம்சமே காமமும்
நேமம் பேசி அதனை மறைத்திடல்
நீதி அன்றெனக் கம்பன் கருதினான்.

∴ ∴ ∴

பக்குவப்படாக் காமமும் பேசினான்
பலரும் போற்றிப் பரவி விதந்திடத்
தக்க தாகப் பதம்பட்ட காம மாம்
சாந்த மான தனிப் பெரும் காதலின்
முக்கியத்தை முதன்மையை அன்னதன்
முழுமை யான குணத்தையும் பேசினான்
எக் கருத்தையும் பூரண மாகவே
எடுத்துக் காட்டுதல் கம்பனின் நோக்கமாம்.

∴ ∴ ∴

சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
சேர்க்கும் இன்பு விழிகளின் பாற்பாடும்
ஒத்திசைக்கும் மொழிகளின் சேர்க்கையால்
ஓவியம் செயும் கம்ப செந்தாமரை
வைத்தி ருக்கும் நிதியம் எனத்தக
வாய்த்த இன்பு மனங்களின் பாற்படும்
எத்தி சைக்கும் மணக்க எழுத்தினால்
இயற்ற மிழ்க்கொரு செங்கொடி நாட்டினான்

காதல் சொல்லக் கனியும் தமிழ்மொழி
காய்தல் சொல்லக் கனன்று வெகுண்டெழும்
நோதல் சொல்ல நுடங்கிய நொய்ய சொல்
நூறு கூறு புடப்பகை மேல் உறும்
மோதல் சொல்ல முரட்டுத் தனத்துடன்
மூசி மூசி முயன்று நொருக்கிடும்
ஏது தேவையோ அன்னதோர் தன்மையின்
இசைந்து போவதே கம்பன் கவித்துவம்.

∴ ∴ ∴

பரதன் கொண்ட அறச்சினம் சொல்லிலே
பாய்ச்சும் போதில் அவனது சொல்வலி
கரத லங்கள் ஒலிசெய்து மெச்சியே
காதலித்து நயக்கத் தகுந்ததாம்
உருகி நெஞ்சு குழைந்து தயரதன்
உள்ளம் நொந்து வருந்தி இரங்கலைப்
பெருகி ஓடும் கவிதையிற் காட்டலைப்
பேசிப் பேசி வியந்து ரசிக்கலாம்.

∴ ∴ ∴

அண்ண னுக்கெதிராகப் பரதனே
ஆட்கள் கூட்டி வருகிறான் என்பதாய்
எண்ணிக் கொண்ட குகனது வார்த்தையில்
எரியும் சீற்றக் கனல்களைக் காணலாம்
தண்ணெ னத்தெளிந் தோடும் நதிப்புனல்
சால்பு மிக்கவர் தம் கவிக் கொப்பெனப்
பண்ணி நல்கிய பாடலொன் றே நறும்
பாவி ரும்பிகள் போற்றிடப் போதுமாம்.

∴ ∴ ∴

வில்மு றித்த கதையினைச் சொல்வதும்
வெற்பிடித்த கதையினைச் சொல்வதும்
பல் நெரித்துப் பல தலையோன் கொளும்
பரப ரப்பை நுணுக்கமாய்ச் சொல்வதும்,
மெல்லி யல் மிதிலைக் குமர் கொண்டுள
விரக தாபம் விபரமாய்ச் சொல்வதும்
கல்வி வல்லவன் என்று நாம் போற்றிடும்
கம்ப நாடனின் செய்யு கவித்துவம்.

# வேள்வித் தீ

## செங்கை ஆழியான்

அவள் பெரிய ஒரு வெடிகுண்டையே தூக்கி அவன் தலையில் போட்டுவிட்டுப் போய் விட்டாள்.

“மூத்தவனைப் பள்ளிக்கூடத் தாலை நிப்பாட்டி மேசன் செல்லத்துரையோடை வேலைக்கு அனுப்பப் போறன். வீட்டிலே நாளைக்கு அடுப்பு மூட்ட ஒரு சிறங்கை அரிசி கூடக் கிடையாது”

வலதுகால் மரண வேதனையைத் தருகின்றது மெலிந்த அவன் காலை மருந்து வைத்துக் கட்டித் துணிகளாற் சுற்றி யானைக்கால் ஆக்கி விட்டார்கள். அந்த வேதனையை இப்போது அவன் சகித்துக் கொள்வான். ஆனால் பொன்னி கூறியதை அவன் இதயத்தால் கிரகிக்க முடியவில்லை.

அவனுடைய எண்ணங்கள், ஆசைகள் யாவும் ஒரு கணத்தில் மண்ணோடு கலந்ததை அவன் உணர்ந்தான்.

ஐந்து நாட்கள், அவன் ஆஸ்பத்திரிக்கு வந்து. அதற்குள் வீட்டில் ஒரு சிறங்கை அரிசி நாளைக்கு உலைமூட்டக் கிடையாது. அன்றன்றாடு வாழ்வதற்காக உழைத்து வாழ்பவர்களில் அவனும் ஒருவன்.

கட்டில் அவனுடல் நெளிவைப் பொறுக்காது ‘கிரீச்’ சிடுகின்றது. அவன் பக்கத்துக் கட்டிலைவிட, கிழங்குகளை அடுக்கியது போல அந்த ‘வார்டு’ முழுவதும் நோயாளர்கள். எத்தனை வகையான நோய்கள்– நேற்று அவனைப் பார்க்க வந்திருந்த முருகேசு வாத்தியார் கூறியது அவனுக்கு நினைவு வருகின்றது.

“பெரியதம்பி, ஞானம் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? சாதாரண வாழ்விற்கும் அப்பால் ஒன்றை இருப்பதாக எண்ணி மயங்குவது! அல்லது சாதாரண வாழ்வை வெறுக்கின்ற நிலை! அந்த நிலை கடலையில் தான் பலருக்கு ஏற்படுமாம். இந்த ஆஸ்பத்திரி வார்டில் இருநாட்கள் படுத்துக் கிடந்தால் போதும். அந்த நிலை ஏற்பட்டுவிடும்போலிருக்கிறது”

அவனுக்கு முருகேசு வாத்தியார் கூறுவதில் பல விளங்குவதேயில்லை. அவரைப்பற்றி எண்ணும் போதெல்லாம் அவன் ஒரு தெய்வத்தின் முன் நிற்பது போல உணர்வான்.

மனிதருக்காக இரக்கப்படுகின்ற மனிதர்.

எத்தனையோ பெரிய மனிதர்கள் அவனது கிராமத்தில் இருக்கிறார்கள். பணத்தில் பெரிய மனிதர்கள் அல்லது சாதித் தடிப்பில் பெரிய மனிதர்கள்.

முருகேசு வாத்தியார் அவர்களுள் ஒரு கலங்கரை விளக்கம்.

அவன் மெதுவாகக் கண்களை மூடிக்கொள்கின்றான். பொன்னி கூறிவிட்டுப் போனது திரும்பத் திரும்ப மண்டையைக் குடைகின்றது. மூத்தவனைப் பள்ளிக்கூடத்தால் நிற்பாட்டுவதா?

முருகேசு வாத்தியார் இதனை அறிந்தால் எப்படித் துடித்துப் போவார்.

''உதார் பெரியாம்பியனே, நீ எங்கை இங்கை வந்தாய்?"

அவன் கண்களை விழித்துப் பார்த்தான். அவன் கால்மாட்டில் அம்பலவாணர் செருக்குடன் நின்றிருந்தார். பட்டுவேட்டி சால்வையுடன், ஒருகையில் குடையும் மறுகையில் கார்ச் சாவியுமாக நின்றிருந்தார்.

''புறக்கிருசி ஐயாவே, சுப்பிரமணியத்தாற்றை வளவுக்கைகிணறு இவெட்டினனுங்கள். வெடி வைத்துவிட்டு ஏறமுன்னமே வெடிச்சுப் போச்சு. அதிலை காலிலை கல்லடித்து எலும்பு விலகிப் போச்சு..."

''கல்லுப் பூமியது...''

''ஓம் பாருங்கோ, ஒரே கண்ணுடிப் பார்".

அம்பலவாணர் போய்விட்டார்.

இதே அம்பலவாணரின் தமையன் சின்னத்தம்பியர்தான் மூன்றாண்டுகளுக்கு முன் அவனைக் குடியெழுப்பி வீதியில் விட்டவர். காணி சின்னத்தம்பியருடையது தான். ஆனால், அதைத் திருத்திக் குடியிருந்தவன் பெரியதம்பி.

சாதிச்செருக்கோ பணத் திமிரோ அவனையும் அவன் மனைவியையும் மூன்று குழந்தைகளையும் வீதியில் நிற்க வைத்துவிட்டது. அப்போது கைகொடுத்தவர் முருகேசு வாத்தியார்தான்

''பெரியதம்பி, இஞ்சைபார்! பூமி எவனுக்கும் சொந்தமில்லை. இன்றைக்குச் சின்னத்தம்பியர் சொந்தம் கொண்டாடுகிறார். போகட்டும்...நாளைக்கு அது யார் யாருக்குச் சொந்தமாகுமோ?...... உனக்குக்கூடச் சொந்தமாகலாம்..."

''ஐயா...!"

''ஓம் பெரியதம்பி! எவ்வகையிலோ படிப்பையும் பணத்தையும் ஆரம்பத்திலேயே சம்பாதித்துக் கொண்ட ஒரு வர்க்கம், பிந்தியதை அடக்கியாள்கின்றது! சாதியிலே எனக்கு நம்பிக்கை கிடையாது பெரியதம்பி! மனிதன் மனிதன்தான். தொழில் அவனைப் பிரிவு படுத்தி ஏற்றத்தாழ்வை உண்டாக்க முடியாது, நீங்கள் இண்டைக்கு எளியசாதி...ஏன் தெரியுமா? நீங்கள் ஏழைகள்...பரம்பரையான ஏழைகள்...கல்வியறிவில்லாதவர்கள்...''

முருகேசு வாத்தியார் விறுவிறெனப் பேசிவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தார்.

''ஏனென்றால் நாங்கள் களுச் சீவுகிறோம், கக்கூசு எடுக்கிறோம், குப்பை அள்ளுகிறோம்..."

முருகேசு வாத்தியார் மெல்லச் சிரித்துக்கொண்டார்.

"பெரியதம்பி! நீங்க செய்யிற தொழில்களினால் நீங்க எளிய சாதியென்றால் நீங்க செய்கிற தொழில்களே இல்லாது போறது நல்லது"

அவனுக்கு ஏதோ புரிவது போலவிருந்தது.

"அப்படியென்றால், ஐயா, காசும் படிப்புந்தானா எங்களை நளவர் பள்ளராக்குது..."

அவர் தலையை ஆட்டினார்.

"நாங்க படிச்சிருந்தால்..."

"உங்களிடம் கொஞ்சமாவது பணம் இருந்திருக்கும். உங்களை மற்றவர்கள் ஏமாற்றுவதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். பணமிருந்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துண்டுநிலம் சொந்தமாக இருக்கும்! ஒவ்வொரு வீடு சொந்தமாக இருக்கும்! சமூகத்தில் மற்றவர்களுக்கு நீங்கள் கடமைப்பட மாட்டீர்கள். பயப்படவுந் தேவையில்லை...இதோ பார் பெரியதம்பி, என்னட்டை அடிக்கடி வருவாரே பொன்னுத்துரை ஓவசியர்...அவர் உயர்ந்தசாதி என்ற உச்சாரக் கொப்பிலேயா பிறந்தவர்: இல்லை உன்னைப் போல ஒருவர்தான். அவருடைய தகப்பன் ஒருபுத்திசாலி ...மகனைப் படிக்க வைத்து இன்று நல்ல நிலைக்கு உயர்த்திவிட்டார்... யாழ்ப்பாணத்திலை அவரை எளிய சாதி என்று ஆர் கூறுகினம்?"

அவனுக்கு மனம் இலேசாக வலிக்கின்றது. பொன்னி எவ்வளவு இலேசாகக் கூறிவிட்டுப் போய் விட்டாள்.

'மூத்தவனைப் பள்ளியாலை நிற்பாட்டி...'

தன்னைப்போல, தன் தந்தையைப் போல, தந்தையின் தந்தையைப் போல அவனும் சமூகத்தின் கீழ்ப்படியில் உழன்று அழிவுறுவதா?

'எத்தனை வேறுபாடுகளைச் சாதி கற்பித்திருக்கிறது. கோவிலுக்குள் போகத்தடை.தேனீர் கடைகளுக்குள் போகத்தடை. சமுதாயம் மாறி வருகிறது தான். எங்கள் புறத்தில் இருந்தும் நாங்கள் மாற வேண்டும்.

பெரியதம்பிக்கு இன்னொரு நாள் நினைவு வருகின்றது. முருகேசு வாத்தியார் வீட்டிற்கு அவன் போயிருந்தான். ஏதேதோ கதைகளோடு அவர் கூறினார்.

"மற்றவர்கள் உங்களிலும் பார்க்கப்பணக்காரர்களாக இருக்கின்றார்களே என்று பொறாமைப்படக் கூடாது, பெரியதம்பி! அவர்களை நல்ல மனித உணர்வோடு பார்த்துவிட்டு, நாமும் முன்னேற முயல வேண்டும்!"

முருகேசு வாத்தியாரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் விவனது அங்கங்கள் ஒவ்வொன்றையும் ஆட்டி ஆத்மாவையும் உலுக்கியது.

பக்கத்துக் கட்டிலில் ஆள் அரவங் கேட்கிறது. அவன் திரும்பிப் பார்த்தான். யாரையோ அதிற் கிடத்தினார்கள். சுற்றிவர நின்றவர்களில் சிலரை அவனுக்குத் தெரியும். அவன் கிராமத்தவர்கள்.

"தம்பி, உதார் ஆள்?..."

அவர்களில் ஒருவன் திரும்பிப் பார்த்தான்.

"உதார், பெரியாம்பியனே... இஞ்சையே கிடக்கிறுய்?... உது நம் மடை சின்னத்துரை... மச்சான் காரன் கத்தியாலே குத்திப்போட்டான்..."

"ஆர்... பசுபதித் தம்பியே..."

"ஓமோம்..."

எல்லாரையும் போகும்படி ஒருவன் கூறினுன். போகும்போது அவர்களில் ஒருவன் கூறியபடி சென்றது பெரியதம்பியின் காதுகளில் கொடூரமாக இறங்கின.

"நளவர் பள்ளருக்குப் பக்கத்திலே அவனே விடுகிறதே... டொக்கட் சிட்டை கூறி இடத்தை மாற்ற வேணும்..."

உள்ளம் ஒருகணம் வெம்பியது. அவன் தன்னேத் தேற்றிக்கொண்டான். அவர்களுக்காக அவன் இரக்கப்பட்டான்.

'பொன்னி மூத்தவனேப் பள்ளிக்கூடத்திற்குப் போகவிடாமல் மறித்து வீடுவாளோ?'

முருகேசு வாத்தியாரிடம் கூறி அவர் முடிவைக் கேட்கவேணும். அவர் முடிவு எதுவாகவிருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். முருகேசு வாத்தியார் இன்று வருவாரோ?

வந்தார்; பொன்னி வருவதற்கு முதலிலேயே வந்தார்.

"எப்படிப் பெரியதம்பி சுகமே..."

"ஓம், ஐயா..."

இவன் நாகலிங்கத்தானேக் குத்திப்போட்டானம். ஒருக்காப் பார்க்கலாம். எங்கினேக்கை..."

பெரியதம்பி பக்கத்துக் கட்டிலேச் சுட்டிக் காட்டினுன். முருகேசு வாத்தியார் அருகிற்சென்று பார்த்தார்.

அவருக்கு நாகலிங்கமும் பெரியதம்பியும் ஒருவர்தான்.

"ஐயா..."

அவர் திரும்பினுர்.

"நம்மடை மூத்தவனேப் பள்ளிக்கூடத்தாலே நிற்பாட்டி வேலேக்கு விடப்போருளாம்..."

அவர் திகைத்துப்போய் நின்ருர். சில கணப்பொழுதுகள் கழிந்தன.

"பெரியதம்பி..."

"என்ன ஐயா, செய்கிறது? வீட்டு நிலவரம் அப்படி..."

"பெரியதம்பி, அப்படிச் செய்துபோடாதை. உன்னேடு அழிய வேண்டியவற்றை உன் மகனுக்கும் செல்லவிடாதே ஏழைமைதான் குலேய வேண்டியஒரு சமூகக்கட்டைக்குலேயாமல் செய்கிறது. உன் மகனேப் போன்றவர்கள் படித்து முன்னேறுவது அவரவர் வீட்டுப் பிரச்சனேயல்ல, பெரியதம்பி! உன் சமூகத்தின் தேவை... பொன்னியை வீட்டுக்கு வரச்சொல்லு... நான் ஏதாவது கொடுத்தனுப்புகிறன்... பிறகு சுகம்வந்ததும் உழைத்துத்தா..."

அவர் போய்விட்டார்.

அவன் முடிவுசெய்துவிட்டான் வாழ்வதற்காகத்தான் இதுவரை உழைத்தான், அவன். இனி உழைப்பதற்காகத்தான் வாழ்வான். அதனுல் அவன் அழிந்துபோகலாம். பரவாயில்லே. அவனேடு அவன் ஏழைமை, அறியாமை, எழியசாதி என்ற பெயர் யாவும் அழிந்து போகும்.

அவன் மகன் படிப்பான்; கை நிறைய உழைப்பான். வீடுவாசல் அவனுக்குச் சொந்தமாகும் சமூகத்தில் அவனும் உயர்வான்.

பொன்னி வந்தாள்.

"மூத்தவனே நிற்பாட்டாதை. அவன் படிக்கட்டும். அவன் படிப்பது நமது சமூகத்தின் தேவை."

பொன்னிக்கு எதுவும் புரியவில்லே.

∴

எல்லோரும் வாழவேண்டும்

நீங்கள் அழிந்தாலும் உங்கள்
படங்கள் அழிவதில்லை!

புகைப்படங்களுக்கு உயிரும் அழகும்
தருவது எங்களின் புளக்குகள்

கலர்
சிலேட்
ஆப்டோன்
லைன் புளக்குகள்

'கலைச்செல்வி'யின் புளக்குகளைச்
செய்பவர்கள் நாங்களே!

BUSIEST & CHEAPEST HOUSE FOR BIOCKS

**SriLanka Block Makers**

113, MESSENGER STREET : COLOMBO.

களிப்புற்ற வாழ்க்கை சலிப்புற்றதா?

அதற்குக் காரணம்.

கல்யாண விஷயமா? காதல் விவகாரமா? கிரக தோஷமா? கீர்த்தி கேடா? குடும்பத் தகராறு? கூடுதல் கடனா? கெடுதல் வருகையா? கேடுகள் சேர்க்கையா? கைநஷ்ட வியாபாரமா? கொடிய எதிரியா? கோணல் வாழ்வா? கௌரவத் தாழ்வா? எதுவானாலென்ன?

நிவாரணம் பெற என் உதவியை நாடுங்கள்.

இலவச ஆலோசனைக்கு
எனக்கொரு கடிதமெழுதுங்கள்

**பி. எம். திசநாயகா**

(நான்கு கோயில்களின் தருமகர்த்தா)

கண்டிரோட், : கம்பளை.

போன் : 44

○ கம்பீரம்!


○ கவர்ச்சி!

○ நாகரீகம்!

**அத்தனையும் யாழ்நகரில் ஒருங்கே தரவல்லது எமது**

- ரெடிமேட் லோங்ஸ்.
- சேட்.
- சோர்ட்ஸ்.

உரிமையாளர்: **ஏ. எச். அமீன்**



# அமீன் டெயிலரிங் மார்ட்,

F. **27**, பெரியகடை : யாழ்ப்பாணம்

---




பாலின் வெண்மையும்

பளிங்கின் தூய்மையும்


ஓடையின் புதுமையும் நிறைந்த

ஆடைகளை அணியுங்கள்!

**மில்க்வைற் சோப் உபயோகியுங்கள்**

**இலகுவில் அழுக்கை நீக்கும் மலிவான சோப்!**

## குறுநாவல்




## 2

திகைத்துத் திணறிவிட்டான் மகாதேவன். என்ன செய்வதென்றே அவனுக்குத்தெரியவில்லை. தன் எதிர்கால வாழ்வின் இன்பம் முழுவதையும் இல்லாதொழிப்பது என்ற சபதத்துடன் எல்லா உலகமும் தன் தந்தையின் தலைமையில் ஒன்று திரண்டு அந்தத் தந்தியை அனுப்பியதைப்போல் மனம் குமுறினான்.

காதல் என்பது வெறும் கானல் தானா? இன்பம் என்பது இனிஎட்டவே எட்டாதா?

பாடசாலை செல்லும் நேரம் நெருங்கியது. மாணவர்கள் சேர்ந்தும் தனித்தும் சுறுசுறுப்புடன் சென்றனர். வீதியோர மரமொன்றின் கீழ் வேதனையாலும் விரக்தியாலும் உடலும் உள்ளமும் தளர்ந்து நின்ற அவனைச் சில மாணவர்கள் அடையாளம் கண்டு அணுகினர்.

'என் சேர், இப்படி நிற்கின்றீர்கள்? உங்களுக்கு ஏதாவது சுகமில்லையா சேர்?"

"டொக்டரிடம் போவதற்கு ஒரு கார் பிடித்து வரட்டுமா சேர்?"

"நீங்கள் இன்றைக்குப் பள்ளிக்கு வரமாட்டீர்களா சேர்?"

தூய்மையான அன்பிலே தோய்த்தெடுத்த கேள்விகள். களங்கமற்ற அம்மாணவர்களின் கரைகாணா அன்பிலே தன் கவலைகளெல்லாம் கரைந்துவிட்டதைப் போன்ற ஒருணர்ச்சி அவனிடம் ஏற்பட்டது. தன் உள்ளத்துணர்வுகளை அந்த அன்பு வெள்ளத்திலே மறைத்துக் கொண்டு அவன் சொன்னான், "என் நெருங்கிய உறவினருக்குக் கடுமையான சுகவீனம் என்று யாழ்ப்பாணத்திலிருந்து தந்தி வந்திருக்கின்றது! அதைப் பற்றிய சிந்தனையில் பள்ளிக்கூடத்தைப் பற்றியே மறந்துவிட்டேன்!"

புரைதீர்ந்த நன்மை தரும் அப்பொய்யால் தன்னைப் போர்த்துக் கொண்ட அவன், பாடசாலையை நோக்கி மெல்ல நடந்தான். அவனுடைய சொந்த உணர்வுகளின் சோக இயல்பினுக்கு மதிப்பளிப்பது போல் மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தது மாணவர் குழாம்

மல்லிகையின் மெல்லிய நறுமணம் அவனுடைய நினைவை இழுத்தது "மலர் வாசம்" சமீபித்துவிட்டது. 'அங்கே செல்ல வேண்டும்' எனத் திடீரென்று எழுந்த தவிப்பைத் தந்தியின் செய்தி தகர்த்

தெறிந்தது. வழக்கம்போல் வாச லிலேமாதவி நிற்கமாட்டாளா என்ற ஏக்கம் எழுந்தது. ஆனால், அப் போதைய மனநிலையில், மாதவி நிற்காமல் விடுவதே நல்லதென்றும் தோன்றியது. அவள் அங்கே நிற்க— அவன் அறிமுகச் சிரிப்பை உதிர்க்க அதற்குப் பதிலாக அவள் அழ அல்லது கதவைப் படீரென்று சாத்தி விட்டுச் செல்ல...மாணவர்களின் முன்னிலையில் இப்படியொரு அசம் பாவிதம் நடைபெற்றுவிட்டால்...?

''மலர் வாச''த்தை நிமிர்ந்து நோக்கும் நெஞ்சுத்தைரியமின்றி, நிதானமற்ற நினைவுகளுடன் அந்த நெடுந்தெருவில் நடந்தான் மகா தேவன்.

பாடசாலையை அடைந்ததும் வாயிலிற் சந்தித்த அதிபர் அவனைக் கேட்டார், ''என்ன மிஸ்டர் மகா தேவன்! வாடிச் சோர்ந்து போய் விட்டீர்களே!''

''சேர், அவருக்கு யாழ்ப்பாணத் திலிருந்து தந்தி வந்திருக்கிறதாம் சேர். அவருடைய சொந்தக்காரர் ஒருவருக்குக் கடுமையான வருத்த மாம்''—தக்க சமயத்தில் மாணவன் ஒருவன் கைகொடுத்திராவிட்டால் மகாதேவன் அதிபரிடம் என்ன உளறியிருப்பானோ!

பொய் சொல்பவர்களுக்கு ஞாபக சக்தி நிறைய இருக்கவேண்டும் என்பது உண்மைதான். அதில்லா தோர் முன்னுக்குப் பின் முரணைக் கூறிக் கையும் மெய்யுமாக அகப் பட்டுவிடுவார்கள். மகாதேவன் மறதிக்காரனல்லன். ஆனால் அவ னுடைய 'ஞாபகம்' முழுவதும் 'சக்தி' மயமாய் இருந்த இவ்வேளையில், சற்று முன்னால் அவன் மாணவர் களுக்குக் கூறிய பொய் மறந்து தான் போய்விட்டது! அந்தச் சமயத் தில் ஒலித்த மாணவனின் குரலைத் தன் ஞாபக மறதிக்கு எச்சரிக்கை யாகக் கொண்டான் அவன்.

''அப்படியானால் நீங்கள் யாழ்ப் பாணம் போகவேண்டுமோ? உங்க ளுக்குத்தான் 'லீவு' நிறைய இருக் கின்றதே!''

அதிபரின் குரலிலிருந்த கனிவு அவனுடைய நெஞ்சைக்குடைந்தது. தந்தியின் வாசகங்களின்படி அவன் யாழ்ப்பாணம் செல்லத்தான் வேண்டும் ஆனால், அதன் உண் மைக் காரணத்தால் ஏற்படக்கூடிய பரிகாசமும் இந்தப் பொய்மையால் ஏற்பட்டுவிட்ட பரிவும் ஒன்றாகுமா? எவருக்குமே தீமையில்லாத பொய் யானாலும் அதைச் சொன்னதற்காக அவனுடைய நெஞ்சு கூனிக் குறு கியது.


எனினும், சொன்ன பொய்யை என்ன நேரினும் காப்பாற்றியே தீர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இன் னும் நீங்கவில்லை என்பதை உணர்ந் தான்.

''நான் இன்னும் அதைப்பற்றி முடிவு எடுக்கவில்லை சேர். போவ தானாலும் மத்தியானத்திற்கு மேல்த் தானே போகலாம்!''

''உங்கள் விருப்பப்படியே செய் யுங்கள்''—அதிபர் போய்விட்டார்.

ஆசிரியர்கள் தங்கும் அறைக் குள் நுழைந்தான் மகாதேவன். இரண்டொரு ஆசிரியர்கள் மட்டுமே வந்திருந்தனர். மகாதேவனின் முகத்தோற்றம் அவர்களை அழைத் தது. பழக்கப்பட்ட வாய், கிளிப்

# வாழ்க மணமக்கள்!



மணமகன்: திரு. மு. ஆலாலசுந்தரம் B. A.
(நியாயவாதி)

மணமகள்: திருமதி ஆ. யோகேஸ்வரி

இவர்களின் திருமணம் செல்வச் சன்னதி ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

---

பிள்ளை போல் எல்லா வற்றையும் ஒப்பித்தது.

அந்த உறவினர் யார்? மகாதேவனுக்கு எந்த விதமான உறவு? அவருக்கு என்ன வருத்தம்? என்றெல்லாம் விபரமாக விசாரித்தால் மகாதேவன் குளறியே விடுவானோ? எனப் பயந்தவர்களைப்போல், ஒரு சில ஆறுதல் வார்த்தைகளுடன் அப்பால் நகர்ந்து விட்டனர் அந்த ஆசிரியர்கள்.

தனிமையில் மாதவியின் நினைவே அவனுக்குத் துணையானது.

அவனைக் கண்டதும் தன் மான் விழிகளை மலர்த்தி அவனைப் பார்க்கும் பார்வையை; எவருமே கவனியாத இடைநேரங்களில் இரகசியமாக அவனை நோக்கிச் சிந்தும் எழிற் புன்னகையை; என்ன சந்தேகம் ஏற்பட்டாலும் அதை அவனிடமே கேட்டுத் தெரிந்துகொள்ளவிழையும் 'பேதைமைப்' பொலிவை—அவன் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டான்.

சில நாள்களுக்கு முன்னர்தான் அந்த வகுப்பிலுள்ள மாணவர்களை கட்டுரை ஒன்றெழுதும்படி சொல்லியிருந்தான். ஒவ்வொருவரும் தத்தம் இலட்சியத் தொழில் பற்றி எழுதினார்கள்.

''எங்கள் நாட்டிற்குப் புதிதாகத் தொழில் நுட்ப நிபுணர்களோ, விஞ்ஞானிகளோ தேவையில்லை. ஏற்கனவே இங்கிருப்பவர்களே போதும். எழுத்தாளர்களே இந்த நாட்டிற்குத் தேவையானவர்கள்.

சிந்தனையில் முகிழ்க்கும் எண்ணங்களே செயலின் ஆதாரமாக, அடிப்படையாக விளங்குகின்றன. சிந்தனைக் கடலில் எண்ண முத்துக்கள் விளைவதற்கு இலக்கியத் தேன் மழை இன்றியமையாதது. உன்னதமான இலக்கியங்களை உருவாக்கி, எண்ணங்களை எழிலாக்கும் எழுத்தாளர்களே எங்கள் நாட்டிற்கு இன்றியமையாதவர்கள்.

**காதல் 'மைலே!'**

சுந்தர்: நான் அவளை எவ்வளவு தூரம் காதலிக்கின்றேன், தெரியுமா?

சங்கர்: பஸ் நிலையத்திலிருந்து சுமார்...ஒரு மைல் வரை இருக்குமோ.

—மு. க.

பழைமைப் பண்பாட்டின் பாது காவலன் எழுத்தாளன். புதுமை வாழ்வின் நெறியாளனும் அவனே. மறந்து மறைந்து போன கலைமலர்களிலிருந்து நறுந்தேனைச் சேகரிக்கும் அவனுடைய கற்பனைத் தேனீ, இன்றிருக்கும் மனிதனும் இனி என்றோ தோன்றப் போகும் மனிதனும் அதை மாந்தி மகிழ்ந்து இன்பமும் எழுச்சியும் பெற வேண்டும் என்பதற்காகத் தன் புதுமை இலக்கியத் தேன்கூட்டில் அதை இட்டு நிரப்புகின்றது. இத்தகைய உயர் சக்தியும் பெரும் திறமையும் நிறைந்த எழுத்தாளர்களை நமது சமுதாயம் ஏனோ போற்றத் தவறிவிட்டது.

எழுத்தாளனின் ஏழைமையும், இந்நாட்டுப் பத்திரிகை முதலாளிகளின் இறுமாப்பும், வாசகர்களின் கீழ்த்தரமான இரசனை உணர்வும் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டைகளாகவுள்ளன. இவற்றுள் முன்னதை முதலில் நீக்கினால், பின்னவை தாமாகவே நீங்கும். தன் சிருஷ்டிச் சிறப்பினால் இறுமாப்பை அகற்றி, இரசனை உணர்வை உயர்த்திவிடுவான் எழுத்தாளன். அவனுடைய கதைகளையும் கவிதைகளையும் நூலாக்கி மக்களுக்கு வழங்கவேண்டும். அச்சுக்கும் தாளுக்கும் கொடுக்கும் பணத்தை விடப் பன்மடங்கு தொகையை எழுத்தாளனுக்குக் கொடுக்க வேண்டும். பணம் வேண்டும் என்பதற்காக அவன் எழுதுவதில்லை அவன் வேண்டும் என்பதற்காக நாம்தான் பணம் கொடுக்க வேண்டும்.

இதயத்திற் படிந்தவற்றை ஏட்டிற் பதிக்கும் எழுத்தாளனுக்கு அவற்றை உலகிற் பரப்பும் வழி தெரிவதில்லை. அந்த வழியையே எந்தன் தொழிலாகக் கொள்ள விரும்புகின்றேன் பதிப்பகமொன்றைத் தொடக்கிப் பயனுள்ள நூல்களை வெளியிட விரும்புகிறேன். உலகத்தின் கண்களுக்கு இது ஒரு தொழில்தான். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், இது தொழிலன்று, தொண்டு. எழுத்தாளன் வாழ்ந்தால் இவ்வுலகமே வாழும். எழுத்துயர இவ்வுலகுயரும்" என எழுதியிருந்தாள் மாதவி.

வயதிற்கு மீறிய சிந்தனைதான்! வகுப்பிற்கு மீறிய கட்டுரைதான் ஆனால் அதிலிருந்த எளிமையும் அழகும், இலட்சிய வேகமும், அதை மற்றையோர்க்குப் படித்துக் காட்டும்படி தூண்டின. அவன் அப்படிப் படித்துக் காட்டி அதன் சிறப்பை விளக்கியபோது, அதை முகஸ்துதியாகக் கருதிக் கூனிக் குறுகி, அப்படிச் செய்வதையே நிறுத்தி விடும்படி கண்களால் அவனைக் கெஞ்சிய கண்ணியத்தை நினைத்துக் கொண்டான் மகாதேவன்.

களங்கமற்ற அந்த அழகிய முக பாவங்களையும், கவலையால் அழுது கன்றிச் சிவந்துபோன முகவாட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான் மகாதேவன். அவளின் அழகு

முகத்தில் அழுகையூட்டி, அன்பு நெஞ்சில் அதிர்ச்சியூட்டி, ஆனந்த வாழ்வில் அவலமூட்டியது அவன் தானே!

உடனடியாகமாதவியைப்பார்த்து விடவேண்டுமாப்போல் ஒரு துடிப்பு எழுந்தது. அந்தத் துடிப்பின் எதிரொலியைப் போல் மணியும் அடித்தது.

மாதவியின் வகுப்பறையை நோக்கி மெல்ல நடந்தான் மகாதவன். ஒவ்வோர் அடியுடனும் முன்பிருந்த அன்புத் துடிப்பின் வேகம் குறைய, ஒருவித அச்சத் துடிப்பே அதிகரித்தது. போதித்த இலட்சியங்களைப் புறக்கணித்து விட்ட அவனைப் போற்றுவார்களா மாணவர்கள்? அவனைப் பார்த்ததும் பசுத்தோல் போர்த்த புலியெனப் பயந்து பதுங்கிவிடுவார்களா அவர்கள்?

மாணவர்கள் வணக்கம் கூறி வரவேற்றனர். அவனுடைய வருகையின்போது அவர்கள் வழக்கமாகக் காட்டும் உற்சாகத்தை அவர்களின் குரலிலிருந்து இன்றைக்கும் உணர்ந்து கொண்டானாயினும் அவர்கள் எவரையும் நிமிர்ந்து நோக்காது தன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

மாதவி வகுப்பிற்கு வந்துவிட்டாளா? அல்லது இனி அவள் என்றுமே வரமாட்டாளா?—கேள்விகள் கேள்விகளாகவே நின்று அவனுடைய இதயத்தைக் குடைந்தன.

தினவரவு இடாப்பு வந்தது. வகுப்பைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டு, ஒரு நொடியில் அதை அடையாளப்படுத்திவிடுவான் மகாதேவன். ஆனால இன்றைக்கு அப்படிச் செய்வதற்கு அவனால் முடியவில்லை. மாதவி வகுப்பிலிருந்து அவன் பார்க்கும் போது அவனுடைய பார்வையில் அவள் சிக்குப்பட்டால்...?

அவளைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் வந்தவன், 'அவள் வராமலே இருக்கட்டும்' என மனதிற்குள்ளே பிரார்த்தித்துக் கொண்டு ஒவ்வொருவரின் பெயரையும் அழைத்தான்.

"ஆனந்தன்...வரதன்...மல்லிகா ...மா.. தவி...!"

கிணற்றுளிருந்து வருவதைப் போல் ஒலித்தது மாதவியின் பதில்! மாதவி வந்துதான் இருக்கிருள்!

மகாதேவனின் கைகள் நடுங்கப் பேனை நழுவிக் கீழே விழுந்தது.

முன்வரிசையிலிருந்த அத்தனை மாணவர்களும் எழுந்து ஓடிவந்தார்கள், விழுந்த பேனையை எடுத்துக் கொடுப்பதற்கு. அவர்களின் வேகம் ஏற்படுத்திய ஒருவித ஒலியில் மகாதேவன் தன்னை உணர்ந்து கொண்டான்.

பேனை உடைந்துவிடவில்லை. ஆனல் அது விழுந்த அதிர்ச்சியில் கழுத்தினூடே மை வெளியேறி எங்கும் சிதறிவிட்டது. பேனையை எடுத்த மாணவன், அதில் வழிந்

## கவனியுங்கள்!

"கலைச்செல்வி"யின் சந்தாப் பணம், விற்பனைப் பணம், விளம்பரப் பணம், ஆகியவற்றை நிர்வாகி கலைச்செல்வி சுன்னுகம் என்று எழுதியனுப்புங்கள், ஆசிரியர் பெயருக்கு அனுப்ப வேண்டாம்.

## இதோ ஒரு பரிசு!

தங்கள் பொங்கல் மலரில் வெளியான ''பாரிசவாதம்'' என்ற சிறுகதை என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. சு. வே. அவர்களின் இனிமையான தமிழ் நடையும், சுவையான முறையிற் கதையைக் கூறும் விதமும் கதையின் சிறப்புக்கு முக்கிய காரணங்கள். இத்தகைய சிறந்த எழுத்தாளரைக் கெளரவிக்க வேண்டியது எமது தலையாய கடமை. வாரி வளங்குவதற்கு நான் வள்ளலல்ல. கதையைப் படித்ததும் ஏற்பட்ட மன எழுச்சியின் காரணமாகப் பத்து ரூபாவை இத்துடன் அனுப்பியுள்ளேன். என் சிறிய அன்பளிப்பாகக் கதாசிரியருக்கு இத்தொகையை அனுப்பிவைக்கவும்.

சுன்னாகம். சி. ஜெகந்நாதன்

இவ்வாசக அன்பரின் பரிசுப் பணமாகிய 10/- ரூபா திரு. சு. வே. அவர்களுக்கு உடனடியாகவே சேர்க்கப்பட்டு விட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

ஆ—ர்

திருந்த மையைத் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்க, வேறொருமாணவன் தன்னுடைய பேனாவை எடுத்து மகாதேவனிடம் கொடுத்தான். ஆனால், சக ஊழியன் ஒருவனுக்கு அனுதாபம் தெரிவிப்பதைப் போன்று, அந்தப் பேனா எழுத மறுத்துவிட்டது!

''இது 'உதறு மொடல்' சேர்! இரண்டு தடவை இதைக் குலுக்கி உதறினால்த்தான் மை ஒழுங்காக வரும்!'' என்றான் மாணவன் ஒருவன் துயரம் மிகுந்த இந்த நிலையிலும், தான் முன்பு நகைச்சுவையாக உபயோகித்த ஒரு சொற்றொடரை ஞாபகமாக வைத்திருந்து அம்மாணவன் தன்னிடமே கூறியதைக் கேட்க ஓரளவு பெருமையாகக்கூட இருந்தது மகாதேவனுக்கு.

மாணவனின் சொற்படி பேனாவை உதறினான் மகாதேவன். அப்படியொரு அதிர்ச்சி வைத்தியம் செய்தபோது அநாயாசமாக வெளிவந்த மை, அவன் எழுதஆரம்பித்தபோது மீண்டும் வேலை நிறுத்தம் செய்தது.

முன்னாலிருந்த மாணவர்களைப் பார்த்தான் மகாதேவன். பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட மாணவர்கள் ஒவ்வொருவரும்' நான் முந்தி, நீ முந்தி' என்று ஒவ்வொரு பேனையுடன் வர அவர்கள் அனைவரையும் முந்திக் கொண்டமாணவி ஒருத்தி, ''இது நல்ல பேனை சேர்... மாதவியின் பேனை'' என்று சொல்லி அழகான பேனையொன்றை அவனிடம் கொடுத்தாள்,

உரிமையில்லாத ஒன்றைப் பகிரங்கமாக உபயோகிக்கும் மனத்தயக்கத்துடன், அதே சமயம், அத்தயக்கத்தை வெளியே தெரியவிடாது மறைக்க வேண்டும் என்ற தவிப்புடன் பேனையை வாங்கி, மற்றைய மாணவிகளின் பெயர்களை அழைத்து அந்தக் கடமையை முடித்துக் கொண்டான்.

மீண்டும் அவன் மாணவர்களை நோக்கியபோது, அவர்கள் ஒவ்வொருவரும், விரிந்து கிடந்த இலக்கியப் புத்தகங்களின் முன்னாலிருந்து ஆவல் ததும்பும் விழிகளுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாணவர்களின் சிந்தனையைக் கிளறும் வகையில் முதலுள் ஒரு குறிப்பைக் கூறியிருந்தான் மகாதேவன். ''வெய்யோனொளி தன் மேனியில்...'' என்ற கம்பராமாயணப் பாடலில் வரும் 'ஐயோ' என்ற சொல், கம்பனுடைய கவிதா சக்தியின் மகத்தான வெற்றி என்பது அவனுடைய கூற்று.

மாணவர்களுக்கு ஒரே திகைப்பாகவும் மயக்கமாகவுமிருந்தது. இராமனின் அழகை வர்ணிப்பதற்குச் சொல்லின் செல்வனுகிய கம்பனிடம் சொற் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. கம்பனுன கம்பனே இந்த இடத்தில் தோல்வியடைந்துவிட்டான் என்ற ஒரு விளக்கத்தைத்தான் மாணவர்கள் இதுவரை கேள்விப்பட்டிருந்தனர். அப்படித்தான் பெரும்பாலான இலக்கிய ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் பொது மேடைகளிற் கூறினர். கம்பனின் படு தோல்வியை, எவ்வாறு மகத்தான வெற்றி என்று கூறலாம்?

மகாதேவனின் கருத்திற் புதுமையும் விளக்கத்திற் தெளிவும் இருக்கும் என்பது மாணவர்களுக்கு நன்கு தெரியும். அந்தப் புதுமையான, பொருத்தமான விளக்கத்தைக் கேட்கும் ஆவல் முகத்திற் சுடர்விட, அமைதியாக இருந்தனர் அவர்கள்.

இராமனின் உருவைச் சித்திரத்தில் வரைந்து காட்டினுல், 'அட, இவ்வளவுதானு?' என்றுவிடுவோம். கைதேர்ந்த ஓவியன் வரையும் மிகச் சிறந்த ஓவியமானுலும், பார்ப்போரின் கற்பனைவளத்தின் முன்னுல், அந்தச் சிறப்பு மங்கியே போகும். இராமனின் அழகை, வார்த்தைகளுள் அடக்குவது அந்த அழகுக்கு எல்லை கட்டுவதாகவே அமையும். மையோ, மரகதமோ, மழைமுகிலோ, மறிகடலோ என ஒவ்வோருவமையாகச் சொல்லிஇராமனின் அழகையும் குணத்தையும் ஒருங்கே உயர்த்திய கம்பன், அந்தச் சொற்கள் போதவில்லையே, அவற்றிலும் அர்த்த புஷ்டியான சொற்கள் கிடைக்கவில்லையே என்பதனுல், ''ஐயோ,' என அலறியதன் மூலம் இராமனின் மகோன்னதமான அழகை, படிக்கும் ஒவ்வொருவரினதும் மனோதர்மத்திற்கு மேற்ப அவரவர் மனத்திரையில் வரையச் செய்வதில் மகத்தான வெற்றி கண்டான் எனத் தான் கூறவிருந்த கருத்தை முதலில தன் மனத்துக்குள்ளேயே ஒழுங்குபடுத்திவிட்டு அப்பாடலின் பின்னணியை மாணவர்களுக்குச் சொல்லத் தொடங்கினுன்.

இராம இலக்குமணரைப் பற்றிச் சுருக்கமாகக்கூறிவிட்டு சீதையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தபோது வார்த்தைகள் தடுமாறின.

உன்னதமான !காவியங்களின் உயர் கதாநாயகர்களுடன் தம்மை ஐக்கியப்படுத்தி அவர்களிலே தம்மைக் காணும் 'வாசக மனப்பழக்கம்' மகாதேவனிடமும் இருக்கத்தான் செய்தது. இராமாயணத்தை நினைக்கும்போதெல்லாம் தன்னை இராமனுகவும் மாதவியைச் சீதையாகவும் பாவித்து அவன் மகிழ்வதுண்டு.

இப்போது, காவியச் சீதையைப் பற்றிச் சொல்லத் தொடங்கிய போது, அவனுடைய 'சீதை'யாகிய மாதவியே மனக்கண் முன்னே தோன்றினுன், முதலிரவு ''மலர்மஞ்சத்தில்

நடைபெற்ற நிகழ்ச்சியும், இப்போது குனிந்த தலை நிமிராது, தானிருப்பது அவனுக்குத் தெரியவே கூடாது என்று நினைப்பதைப் போலிருந்த மாதவியின் தீக்கோழி நிலையும் மகாதேவனின் இதயத்தைத் தாக்கிக் குரலில் அசாதாரண நடுக்கத்தை ஏற்படுத்தின. இதயத்தின் ஓலம் ஒரேயடியாக வெளியேகேட்டு விடுமோ எனப் பயந்து கொண்டே, தன் விளக்கத்தை மெல்ல மெல்லச் சொல்லிக்கொண்டிருந்தான்.

அந்த இக்கட்டிலிருந்து அவனை மீட்குமாப்போல் அதிபரின் பணியாள் அங்கே வந்தான்; அதிபர் அவனை மிகவும் அவசரமாகச் சந்திக்க விரும்புவதாகவும் அறிவித்தான், அந்தப் பணியாளனுக்கு நெஞ்சத்தால் நன்றி தெரிவித்தபடி அதிபரிடம் சென்றான் மகாதேவன்.

அதிபர் எங்கோ வெளியே செல்வதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தார்.

"மிஸ்டர் மகாதேவன், நான் உடனடியாகக்கொழும்பிற்குச் செல்ல வேண்டியுள்ளது. நீங்கள் யாழ்ப்பாணத்திற்குப் போக விரும்பினால் போங்கள். திரும்பி வரும்வரை உங்களுடைய வேலைப் பொறுப்புகளை மற்றைய ஆசிரியர்களிடம் பகிர்ந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளைத் துணை அதிபர் செய்துகொள்வார்!"

நன்றியுடன் அதிபரை நோக்கினான் மகாதேவன். அவனுக்கும் அதிபருக்குமிடையில் எத்தனையோ தடவை தகராறு ஏற்பட்டிருக்கின்றது. மாணவர்களைப் பல துறைகளிலும் முன்னேற்ற வேண்டும் என்ற இலட்சியத்துடனிருந்த மகாதேவன், அந்த அதிபரின் பூரணமான ஒத்துழைப்புக் கிடைக்காது மனமுடைந்துபோய் அவரை வெறுத்ததுமுண்டு. ஆனால் அவர்களிருவர்க்குமிடையேயிருந்த தனிப்பட்ட அன்பு என்றுமே மாறியதில்லை.

அதிபரின் வார்த்தைகளிற் காணப்பட்ட அந்த அன்பின் வெளிப்பாடு மகாதேவனை நெகிழ வைத்தது.

சற்று முன்னால் மாதவியின் பேனாவை வாங்கியபோதிருந்த மனத் தயக்கம் இப்போதும் அவனிடம் ஏற்பட்டது. அந்த அன்புக்கும் பரிவுக்கும் அவன் உண்மையிலே உரிமையுள்ளவன்தானா?

'உண்மையைச் சொல்லிவிடுவோமா?' என்றுகூட நினைத்தான் மகாதேவன்.

அவனிடமிருந்து எதையுமே எதிர்பாராது அதிபர் வெளியே போய்விட்டார்.

மகாதேவன் மீண்டும் தன் வகுப்பிற்குச் செல்லத் திரும்பினான். அந்தப் பாடம் முடிவதற்கான மணி அடித்தது. அதற்கடுத்த பாட நேரம் அவனுக்கு ஓய்வு. ஆசிரியர் தங்கும் அறையில் இருப்பதற்கு அவன் விரும்பவில்லை.

துணை அதிபரிடம் சொல்லிவிட்டு வெளியே செல்வதற்குப் புறப்பட்டான். எவருடைய கண்களிலும் அகப்படாமல், கால் போகும் திசையிற் சென்று, அந்த நாற்பத்தைந்து நிமிட நேரத்துள் மீண்டும் பாடசாலைக்குத் திரும்பி விடவேண்டும் என்பது அவன் திட்டம்.

வெயில் 'சுள்' ளென்று அடித்ததால் வேகமாகவே நடந்தான்.

அவனுடைய உள்ளத்தைப் போல் ஒரே சூனியமாகவே அந்த வீதியும் முதலிற் காட்சியளித்தது.

ஆனால், சற்றுத் தொலைவில், தலைக்குப் பாதுகாப்பாகப் புத்தகமொன்றைப் பிடித்தபடி தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்லும் பெண்ணுருவம் யார்?

மாதவிதான்! சந்தேகமில்லை. அவளுடைய நடையும் உடையும் அவனுக்கு நன்கு பழக்கப்பட்டவை தானே!

தன் உள்ளத்து உணர்ச்சிகளை ஒரேயடியாக அவள் முன்னுற் கொட்டவேண்டும் என்ற உத்வேகம் அவனிடம் ஏற்பட்டது. அவனுடைய முயற்சியின்றியே கால்கள் மேலும் வேகமடைந்தன. மாதவியின் பேனை இன்னமும் தன்னிடமே இருக்கும் நினைவும் வந்தது. அதைத் திருப்பிக் கொடுக்கும் சாக்கில் அவளுடன் பேசவும் ''மலர் வாச''த்திற்குச் செல்லவும் அவன் விரும்பினான்.

''மாதவி...¡ மாதவி...!''

மாதவி இப்போது ''மலர் வாச"த்தின் வாயிலை அடைந்து விட்டாள். தன்னை அழைத்த குரலை அடையாளம் கண்டு கொண்ட அவள் வெறுப்புடன் குரலுக்குரியவனை நோக்கினாள்.

''மாதவி...!'' மகாதேவனின் குரலில் பாசம் குமிழியிட்டது.

அந்தக் குரலுக்குப் பதிலளிப்பதைபோல் கதவைப் 'படீரெ'ன்று சாத்தினாள் மாதவி. அடையா நெடுங்கதவுடன் விளங்கும்''மலர்வாசம்" ஆத்திரத்துடன் அடைக்கப்பட்டதை அனுதாபத்துடன் பார்த்த மகாதேவன், பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாது அவ்விடத்தை விட்டகன்றான்.

—தொடரும்'


# புதியதும் பழையதும்

**புதிய பெயர்** | **பழைய இடம்**
**புதிய அமைப்பு** | **பழைய நிர்வாகம்**

வாடிக்கையாளர்களின் திருப்திக்காக நவீன முறையிலே மாற்றியமைக்கப்பட்ட எங்கள் புகைப்படநிலையத்திற்கு இன்றே வருக.

# ஸ்ருடியோ பிறின்சேஸ்

(உரிமையாளர்: M. நடராசா)

**சுன்னுகம்**

# மேடையிலே ஒளி

-எஸ். டி. அரசு-

பல வருடங்களுக்கு முன் எட்டு ஒன்பது வயதுள்ள ஒரு பையன் சில் நாடகத் தயாரிப்பாளர்களருகிற் சென்று அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகத் தனக்குத் தெரிந்த தேவாரம், திருவாசகம் என்று பாட ஆரம்பித்தான். அவர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டு மேலும் பாடக் கேட்கவே அவனும் உற்சாக மேலீட்டில் தனக்குத் தெரிந்ததெல்லாவற்றையுமே பாடலானான். அவற்றைக் கேட்ட அவர்களோ ஈற்றில் குலுங்கக் குலுங்கச் சிரித்து அந்தச் சிறுவனின் நம்பிக்கையையும் சுக்கு நூறாக்கி நாணிக் கோணிக் கூனிக் குறுகி அவ்விடத்தைவிட்டகலச் செய்தனர்.



அச் சிறுவனை அந்நிலைக்காளாக்கியது நாடகப் பித்துத் தான். புராண நாடகங்களே மேடையேறிய அந்நாட்களில் 'சாரீர வசதி' படைத்தவர்களையே நாடக உலகம் வரவேற்றது. அதுவே அவனையும் அப்படிப் பாடச் செய்தது.

அவனுக்கு இருபது வயது நடக்கும்போது அவன் இந்திய இராணுவத்தில் கடமையாற்றினான். இதில் ஆச்சரியம் என்னவென்றால் இராணுவ நாடக நிகழ்ச்சிகளில் பல தடவை அவனை வேஷம் போடக் கேட்டும் அவற்றை அவன் ஏற்றுக்கொள்ளவே இல்லை! காரணம் அத்தனையும் பெண் பாத்திரங்கள். ஒருபட்டாளத்தானுக்குப் பெண் வேடமாவது! பெண் பாத்திரம் தாங்கினால் தன் நண்பர்களின் 'கேலி'களைத் தன் பெயரில் 'ரெஜிஸ்டர்' பண்ணிக் கொள்வதற்கொக்கும் என அவன் அஞ்சினான்.

தாயகம் வந்த அவ்விளை

ஞனுக்குத் திரு. வி. சி. பரமானந்தம் அவர்கள் தயாரித்துவந்த நாடக மொன்றில் சிறியதோர் பாத்திரம் கிடைத்தது. தினமும் முன்னிரவு காலங்களில் ஒத்திகைகளை ஒழுங்காகச் செய்துவந்தான். ஆனல் நாடகநாள் நெருங்கி வரவர அவனுள்ளத்தில் ஒருவித பயமும் 'மேடையேற'லாயிற்று.

நாள் வந்தது! நாடகம் தொடங்கிவிட்டது! வேஷம் போட்டாயிற்று! ஒப்பனை முடிந்தது! குறிப்பிட்ட அந்தக் காட்சி வந்தது. அவனும் மேடைக்கு வந்துவிட்டான்.

யார் அந்த இளைஞன்? யார் அந்த நடிகன்?

சாட்சாத் நானேதான்!

ரசிகர்களை நோக்கினேன். நெஞ்சம் கூத்தாடியது.(வேறென்ன, நடுக்கம்தான்) கைகளோ தாளம் கொட்டின. ஒருமுறை வசனங்களும் தாளம்போட வேறென்னவோ பேசிவிட்டேன். அதைத் திருத்தி மீண்டும் பேசப் போனதால்தான் வந்தது வினை.


மேடையெங்கும் சிரிப்பும், சலசலப்பும். இருக்காதா பின்னே! 'இந்த நாட்டில் எத்தனையோ குழந்தைகள் வீரத்தாய்மார்களைப் பெற்றெடுத்திருக்கின்றார்கள்' என்ற அடுக்கு வசனங்களுக்குப் பூமாரியா பொழிவார்கள்?

நீண்ட நேரம் மேடையிற் தோன்றி நடிக்கவேண்டும் என்ற ஆவலெல்லாம் போய், 'உள்ளே' போனல் போதும் என்ற நிலைக்காளாகி எனது 'சுமை'யையும் இறக்கிவிட்டு மேடையினின்றும் மறைந்தேன். மற்ற நடிகர்கள்...?

அதை ஏன் கேட்கிறீர்கள் போங்கள், அன்று என்னுடன் முதல் முதல் மேடையேறியவர்களில் ஒரே யொருவரைத் தவிர அத்தனைபேரும் 'அவுட்'.

அந்த ஒருவர் என் நண்பர் திரு. இரா. பற்குணம்அவர்கள்தான்.

---



குமாரி சச்சு ஈழத்திற்கு வந்திருந்த போது யாழ்-சமூக சீர்திருத்த நாடக மன்றத் தலைவர் திரு. க. ந. இராசரத்தினம் அவர்கள் சந்தித்து நாடகம், சினிமா வளர்ச்சி சம்பந்தமாகக் கலந்தாலோசித்தார்.

# பட்! பட்!

தாண்டவக்கோன்

ச. வேணுகோபால்,
வண்ணார்பண்ணை.

கே: "கலைச்செல்வி"யின் சார்பில் இந்திய இசைக் கலைஞர் சிலரை இங்கு அழைத்துக் கச்சேரிகள் நடாத்தினாலென்ன?

ப: இசைக் கலைஞர்களையும், நடிகர்களையும் அழைத்துக் கலாச்சார முன்னேற்றத்திற்கு வழிகோல வேண்டும் என்பது "கலைச்செல்வி" நிறுவனத்தாரின் இலட்சியங்களுள் ஒன்று. ஆனால் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குச் சில மாதங்கள் காத்திருக்க வேண்டும். "கலைச்செல்வி" தன் சொந்தக் காலில் உறுதியுடன் நிற்கும் நிலை ஏற்பட்ட பின்னர்தான், இத்தகைய முயற்சிகளில் ஈடுபடலாம். இப்போது, தங்களைப் போன்ற இசைப் பிரியர்களின் ஆவலை யாழ்-பிரதேசக் கலாமன்றம் பூர்த்திசெய்யும் போலத் தெரிகின்றது. தலைசிறந்த கர்நாடக சங்கீதக் கலைஞரான பாலமுரளி கிருஷ்ணா அவர்களை யாழ்ப்பாணம் வரவழைப்பதற்கு அம்மன்றம் முயற்சி செய்கின்றது.

தி. பாக்கியம்,
நல்லூர்.

கே: கொழும்பிலிருந்து புதிதாக ஒரு தமிழ்த் தினசரி வெளிவரப் போகின்றதாமே!

ப: ஆமாம்! 'தவஸ', 'சன்' போன்ற பத்திரிகைகளை வெளியிடும் குணசேனா நிறுவனத்தார் புதிதாக ஒரு தமிழ்த் தினசரியையும் வெளியிடப் போகின்றார்கள். அநேகமாக அடுத்த மாதம் முதலாந் திகதியன்று இப் பத்திரிகை வெளிவருமாம். முன்பு 'சுதந்திரன்', 'வீரகேசரி' ஆகியவற்றின் நிர்வாக ஆசிரியராகப் பணியாற்றிய திரு. எஸ் டி. சிவநாயகம் அவர்கள்தான் புதிய பத்திரிகையின் பொறுப்பாசிரியராயிருப்பாராம்.

கலாநேசன்,
அக்கரைப்பற்று.

கே: நமது நாடு முன்னேற வேண்டுமானால்...?

ப: அரசியல்வாதிகளும், ஆக்கிரமிப்பாளரும், இனவெறியாளரும், ஈனபுத்தி படைத்தோரும், உலுத்தர்களும் ஊதாரிகளும் 'அவுட்டாக' வேண்டும். அவர்களினிடத்தை அறிஞர், ஆசிரியர், இன்மொழியாளர், ஈகையாளர், உத்தமர், உழைப்பாளர் ஊக்கமுடையோர், எழுத்தாளர் ஆகியோர் கைப்பற்றவேண்டும்.

சி. தம்பிராசா,
மாகோ.

கே: "வீரகேசரியை" ராஜாங்க அமைச்சர் ஜயவர்த்தனா விலைக்கு வாங்கிவிட்டாராமே!

ப: அது, புளித்துப்போன பழைய செய்தியாச்சே! அமைச்சரும் வேறு இருவருமாகச் சேர்ந்து "வீரகேசரி" நிறுவனத்தை வாங்கிவிட்டார்கள் என்பது உண்மைதான். தமிழர்களின் கையிலிருந்த 'வீரகேசரி' இனிமேல்தான் தன் பெயருக்கேற்றபடி வீரச்சிங்கமாக ஒலிக்குமோ?

வை நாகலிங்கம்,
மானிப்பாய்.

கே: இலங்கை ஒரு குடியரசானால், அதன் முதலாவது ஜனாதிபதியாக யார் நியமிக்கப்படுவார்?

ப: அந்தச் 'சான்ஸ்' சேர் ஜோன் கொத்தலாவலை, முன்னால் பிரதம நீதியரசர் பசநாயக்கா, வில்மட் பெரேரா ஆகியோருள் ஒருவருக்குக் கிடைக்கலாம்! அதிக உழைப்பினால் அடிக்கடி நோய்வாய்ப்படும் இப்போதைய பிரதமருக்கும் சிலசமயம்

பதவி உயர்வு கிடைக்கலாம்! ஆனால் நாட்டில் தேசிய ஒற்றுமை நிரந்தரமாக நிலவவேண்டுமானால், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தகுதிவாய்ந்த ஒருவரை அப்பதவியில அமர்த்திச் சிறுபான்மை இனத்தினரிடமுள்ள நம்பிக்கையைப் பெரும்பான்மையினர் காட்ட வேண்டும்!

இரா. சிதம்பரம், காரைக்குடி.
கே: தங்கள் நாட்டில் அடிக்கடி புத்தக வெளியீட்டு விழாக்கள் நடக்கின்றனவே!

ப: எங்கள் நாட்டில்தானே வர்த்தக ஒலிபரப்பும ஒழுங்காக நடைபெறுகின்றது! இந்த வெளியீட்டு விழா என்பது வானொலியின் வர்த்தக ஒலிபரப்பைப் போன்றதுதான்!

மு. மயில்வாகனம், புங்குடுதீவு.
கே: மேடையில் ஏறி நாட்டியம் ஆடுபவளை ஒழுக்கம் கெட்டவள் எனச் சமுதாயம் கூறுகின்றதே! அதை நீங்களும் ஒப்புக்கொள்கின்றீர்களா?

ப: தாங்கள் எந்த ஒழுக்கத்தைக் குறிப்பிடுகின்றீர்கள்? நடனக் கலையிலும் ஓர் ஒழுங்கு முறை – ஒழுக்கம் இருக்கின்றதல்லவா? கலையம்சமின்றி வெறுமனே காலையும் கையையும் அசைப்பவள் ஒழுக்கம் கெட்டவள்தானே!

உ. தர்மலிங்கம், யாழ்ப்பாணம்.
கே: பாரதப் பிரதமர் சாஸ்திரி இறந்த செய்தி கேட்டும் சீனு ஏன் மௌனமாயிருந்தது?

ப: தாஷ்கண்ட் மாநாட்டின் வெற்றிச் செய்தி சீனாவுக்கு ஒரேயடியாக அதிர்ச்சியூட்டிவிட்டது! அந்த அதிர்ச்சியினால் சீனாவுக்கு வாயே அடைத்துவிட்டதால், தொடர்ந்து வெளியான சாஸ்திரியின் மரணம் பற்றிச் சீனு மௌனமாகவே இருக்க நேர்ந்துவிட்டது!

எம். ஜி. ஆர். ரசிகன், நல்லூர்.
கே: சென்ற இதழில் ஒரு நேயர் 'நடிகர் தலைவன்" என்று சிவாஜி கணேசனைப் புகழ்ந்து கூறினரே. அந்த நேயர்தான் அப்பட்டத்தைக் கணேசனுக்கு வழங்கியவரோ?

ப: தகுதியும் திறமையும் நிறைந்த தமிழ் நாட்டின் தவ நடிகரை "நடிகர் தலைவன்" என்று புகழ்வதில் தவறொன்றுமில்லையே. கோடிக்கணக்கான நேயர்களின் நெஞ்சிலிருப்பதைத்தான் அந்த நேயர் பிரதிபலித்தார்! இப்படியொரு சிறந்த நடிகர் தாய் தமிழ்நாட்டிலிருப்பதை நினைத்துப் பெருமைப் படுவதை விட்டுவிட்டு, பொருமையும் புகைச்சலும் அடையலாமா?

வே பத்மகாந்தன், நல்லூர்.
கே: லால்பகதூர் சாஸ்திரியின் மரணம் குறித்துச் சென்ற இதழில் ஒரு செய்தியும் இடம்பெறவில்லையே! தங்களுக்கும் பிரதமருக்கும ஏதாவது தகராறு?

ப: அப்படியொன்றுமில்லை! சூரியனுடன் கோபித்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டிருக்க நான் என்ன படுமுட்டாளா? சாஸ்திரியின் மரணச்செய்தி கிடைப்பதற்கு முன்னரே, பொங்கல்மலர் தயாராகிவிட்டது! அதனால்தான் மரணச் செய்தியை வெளியிடவில்லை!

எம். கே. தம்பி, கற்கோவளம்.
கே: பெண்களைச் செல்லமாக வளர்த்து யார்கையிலோ பிடித்துக் கொடுத்துவிடுகின்றார்களே பெற்றோர்கள்! இது முறையா?

ப: அப்படிச் செய்யாவிட்டால், அந்தச் 'செல்லங்கள்' யார் யாரையோ பிடித்துக்கொண்டு பறந்துவிடுவார்களே, அது நல்லதா?

ச. வேதாரணியம், மயிலணி.
கே: தங்களின் உண்மைப்பெயர் தாண்டவக்கோன் தானே?

ப: ஏன், ஏதாவது பொய்யான பேரைச் சொல்லிப் பிடிபட்டுவிட்டதாகக் கேள்விப்பட்டீர்களோ?

# திரை விருந்து...

அன்பார்ந்த ரசிகர்களே!

எல்லா ஸ்ரூடியோக்களுக்கும் போய் வந்துவிட்டேன் நல்ல சில 'குறிப்புகள்' சொல்லவேண்டும் என்பதற்காக. சினிமா, வாழ்க்கையோடு மிக ஒன்றிவிட்டது. (ஏன், வாழ்வே சினிமாவிலிருந்துதானே பிறக்கிறது.) எனவே வெறும் பட்டியல்கள் தருவது மட்டும் அழகல்ல.

தை இதழில் உன்னைப்போல் ஒருவன் பின்னணியில் சில கருத்துகள் சொன்னேன். இம்மாதத்தில் அப்படத்திற்கு நேர்மாறான "அன்பேவா' வந்து கலக்கிறது.

'உ. போ. ஒருவன்' வந்தபோது பாட்டு இல்லை, ஆட்டம் இல்லை, கலைத்தன்மையே இல்லை என்றனர் சிலர். 'அன்பே வா' பார்த்துவிட்டு கதை இல்லை, யதார்த்தம இல்லை, கருத்து இல்லை என்கிறார்கள். நமது "ஆட்களை"ப்பற்றி என்ன சொல்வதென்றே புரியவில்லை. இதையெல்லாம் கூட்டிக் கழிக்கும்போது படங்கள் தயாராவதற்குப் படாதிபதிகள் மாத்திரம் கர்த்தாக்களல்ல என்று சொல்லவேண்டியிருக்கிறது. உடனடியாக இந்த நிலைமையைத்தான் மாற்றவேண்டும்.

ஆங்கிலப் படங்களைப் பாருங்கள், 'நகைச்சுவைப்படம்' 'பாடல்களுள்ள படம்' 'சண்டைப் படம்' 'சரித்திரப் படம்' என்ற விளம்பரங்களோடு வந்தால் அவற்றில் 'கத்தரிக்காய்' 'வெண்டிக்காய்' பொறுக்குபவர்களைக் காணோமே ஏன்? அந்தப் படம் அப்படித்தான் இருக்கும்— இருக்கவேண்டும் என்பதால்! அந்த நிலை வந்தால் படங்களில் தரம் பிரிக்கும் கஷ்டநிலையே தோன்றாது.

ஓரிரு வருடங்களில் நாமும் அந்நிலையை எதிர் நோககலாம் போலிருக்கிறது. கே. எஸ் கோபாலகிருஷ்ணன் 'தெய்வத்தின் தெய்வம்' படம் எடுத்தாரல்லவா? அதன் கரு பிரபல எழுத்தாளர் 'பிலஹரி'யின் 'ஜடம்' என்ற கதையிலிருந்து எடுத்தது. அதற்காக அவர் பிலஹரியைத் தேடிச் சன்மானம் வழங்கினார். இது அதற்கோர் முன்னோடி

ஜெயகாந்தனைத் தொடர்ந்து சிறந்த எழுத்தாளர் 'பிலஹரி'யும் சினிமா உலகில் நுழைந்திருக்கின்றார். இளம் கவிஞர் கனக கிருஷ்ணனும் வந்திருக்கிறார். இவர்களைத் தொடர்ந்து பலர் வரவிருக்கிறார்கள். வரவேண்டும்! ஏனெனில் கலையுலகில் என்றுமே இலக்கியத் தாகம் இருக்கவேண்டும். இலட்சியங்களுக்கே சினிமாவைச் சீர்திருத்தும் திறனும் உண்டு.


சினிமா தொழில்தான், வியாபாரம் நிறைந்ததுதான். ஆனால் (99% இருப்பதைப்போல) வியாபாரத்தைக் கலையாக்கக் கூடாது; கலையை வியாபாரமாககட்டும்!

இப்படிச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. பலவிதத்திலும் பூர்த்தியான ஏராளமான படங்கள் திரையிட முடியாத நிலைமையிலிருக்கின்றன. தமிழ்ப்படங்கள் மாத்திரம் 15க்கும் அதிகம். அவற்றை வாங்குவதற்கு 'ஆட்களை'க் காணோம்.

இப்படங்களில் பல இலட்சங்கள் முடக்கப்பட்டுள்ளன. இதில் ஆச்சரியம் என்னவென்றால் தணிக்கையாளர்களும் திரையிடலாமென அத்தாட்சிப்படுத்திவிட்டார்கள். அதுவும் வருடக்கணக்காகிறது. இந்த இழிநிலையைப் பார்த்துவிட்டுத்தான சென்னையிலுள்ள ஒரு சங்கம் அந்தப் படங்களை வெளிக்கொணர ஆவன செய்து கொண்டிருக்கிறது. அந்தப் படங்களுக்கு ஒரு வழி பிறந்துவிட்டதென்று ஒரு நிம்மதிப் பெருமூச்சுவிட்டால், தொடர்ந்து ஒரு ஏக்கப் பெருமூச்சு. ஏனெனில் முடிவுறாத படங்கள் எண்ணற்றவை இருக்கின்றன! கலைஞர்கள் ஒத்துழைக்கின்றார்களில்லை என்பதால். இவற்றிற்கெல்லாம் என்னதான முடிவு செய்வது?

## என்னதான் முடிவு

'என்னதான் முடிவு' என்றவுடன் கோபாலகிருஷ்ணனின் படம் ஞாபகத்திற்கு வருகிறது. மிக நேர்த்தியான படம். கதை இது: ஒருவன் தான் செய்த கொலையை வேறொருவன் மீது சுமத்திச் சிறைப்படுத்திவிடுகிறான். கால மாறுதலில் அவனது மனம் மாறுகிறது. மனச்சாட்சி உறுத்த, கொலையால் பெற்ற செல்வத்தையெல்லாம் துறந்து யாத்திரை கிளம்பிவிடுகிறான். சமூகத்தில் உயர்த்தப்படுகிறான். ஆத்மீகத்தின் தலைவனாகவே போற்றப்படுகிறான். இந்த நிலைமையில் தண்டனைக்குட்பட்டவன் விடுதலையாகிவருகிறான். இவன் அவனது பாதங்களிற் சரணடைகிறான்.



கற்பனைக்கெட்டாத அற்புதங்களெல்லாம் காதலெனும் 'தேவாலயத்'தில் தேடுகிறார்கள் எஸ். எஸ். ஆரும், கே. ஆர். விஜயாவும்.


மையக் கருத்து "கொலைசெய்வது சமூகவிரோத செயல் என்பதைவிட கொடியபாவம்' என்பதைச் சொல்கிறது. மீண்டும் ஒரு வெற்றி! படத்தில் கதை இருக்கிறது, நல்ல நடிகர்களிருக்கிறார்கள். பிறகு முன்னணி நட்சததிரங்கள் எதற்கு?

## மோட்டார் சுந்தரம் பிள்ளை


சிவாஜிதான் சாரதி, படத்திற்கும். மனைவிக்குத் தெரியாமல்! 25 வருடங்களுக்குமுன் ஒருத்தியை 'மணந்த'கதாநாயகன் அவர். பெண்களின் கல்யாணத்தில்தான் குழப்பம் பிறக்கிறது முதற் "காதலி"யின் மகளை 'மனைவி' காண நேருகிறது ஈற்றில் கணவனின் காதலி தன் தங்கையே என அறியும் போது [illegible] அனுதாபம், இரக்கம்: நமக்கும்தான். ஜெமினியாரைக் குறை சொல்ல என்ன இருக்கிறது. இது இந்தியில் 35 வாரங்கள் ஓடியதாம். நம்மூரிலெல்லாம் எப்படியோ?

## அன்பே வா

ரம்மியமான படம்! அனைவருமே விரும்பக்கூடியது கவலைகளையெல்லாம் மறக்கடிக்க ஒரு படம்! பாடல்களை முணுமுணுக்க ஒரு படம்! குளுமையான காட்சிகளுக்கு ஒரு படம்! புலி வருது, புலி வருது என்றால் நிச்சயம் வந்துவிடும் என்பார்களே! அப்படி இம்மாதிரியான படங்கள் வந்துகொண்டிருந்தால் நம்மவரின் ஏக்கங்களே அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டுவிடுமானால் அதையும் நாம் வரவேற்போம். மொத்தமாக 'கவலையேபோ' என்பதற்கு 'அன்பே வா!'



வாத்தியாரே! உன் ரகசியமெல்லாம் இந்தக் கெமராவுக்குள் அடக்கம், என்னிடம் வாலாட்ட இனி ஏலாது என்கிறார் நாகேஷ்.




[illegible]
ளுக்கு இன்றென்று. நமது மிக உன்னத கலைஞர்களான சிவாஜி கணேசனுக்கும், பானுமதிக்கும பத்மஸ்ரீ பட்டமளித்து கௌரவித்திருக்கிறார்கள். தகுந்த பரிசு. ஆனால் காலங்கடந்தது.

எம் ஜீ. ஆர். ஈழம் வருவது நிச்சயமாகிவிட்டது. சிவாஜி டோக்கியோ போகிறார். நாம் இருந்த இடத்திலேயே இருப்போம்.

கடைசியாக ஒன்று. உங்கள் நாட்டிலேயே 70 M M. தியேட்டர் ஒன்றுதானே இருக்கிறது. இன்னும் இரண்டு கண்டியிலும், கொழும்பிலும் ஏற்படப்போகின்றன வாமே உண்மையா? அவற்றையெலலாம் பங்குனியில் பார்ப்போம்

---

சென்ற 2-1-6ரில் தில்லைச் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவப் புலவர் மகாநாட்டில் "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற சிந்தனையைத் தூண்டும் சுவையான சொற்பொழிவைக் கலைச்செல்விக் காவலர் திரு. இ வைத்திலிங்கம் நிகழ்த்தினர். திரு, கோ வடிவேலாயுதம் (சென்னைக் கிறித்தவக் கல்லூரி), வித்துவான் திரு. வ செல்லையா, திரு பெ திருஞானசம்பந்தம்பிள்ளை [சென்னை மாநிலக் கல்லூரி] வித்துவான் திரு. கு. திருநாவுக்கரசு (சிதம்பரம்) ஆகியோர் மேடையில் வீற்றிருக்கின்றனர்



# பேரும் பரிசும் -10

## சரியான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | தளிரொனறெழுங்கா | ......... | அம்பி |
| 2 | காற்றைபபோசனஞ் செய்து | ......... | சு. வே. |
| 3 | நேரம், விடிைப் போதாகி | ......... | இ. நாகராஜன் |
| 4 | தர்மம் விதைக்க | ......... | முருகையன் |
| 5 | சமுதாய ஏற்றஇறக்கத்திற்கு | ......... | யாழவாணன் |

முதற் பரிசு: 10 ரூபா
திருமதி க. யோகபாக்கியம்
நுணுவில் கிழக்கு,
கல்வயல்.

இரண்டாம் பரிசு: 5 ரூபா
செல்வி. ச. புவனேஸ்வரி
2. புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

மூன்ரும் பரிசு: கலைச்செல்வி சந்தா
சொ. சோதிலிங்கம்,
ஏழாலை மேற்கு,
சுன்னுகம்.

## ஆறுதற் பரிசுகள்

1 செல்வி. க. உதயராணி மே/பா தி. சி. கந்தையா, வேலணை கிழக்கு
2 என். பாலசுப்பிரமணியம், 21/2, சொய்சாக்கலை வீதி, நாவலப்பிட்டி
3 செல்வி செ, தர்மாவதி, சுன்னுகம் தெற்கு, சுன்னுகம்
4 ஐ. எம். காசிம், தெவனுகல, பரணகம
5 செல்வி செ. செல்வநாயகி, 63, தும்பகொட, பலாங்கொடை
6 செல்வி அ. அரியரத்தினம். எழுமுள்ளி, மானிப்பாய்
7 சு. செல்லையா, 376, தமிழகம், யோகபுரம், துணுக்காய்
8 த. தமிழ்மணி தமிழகம், காரைதீவு
9 செல்வி. ச. சபாரத்தினம், திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
10 அரு. சிவானந்தன், கொட்டாங்கந்தை, இறங்கலை
11 S. முத்துராசா வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை
12 நேதாஜி அருளானந்தம், 70, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

# பேரும் பரிசும் :- 11

இந்த மாசி இதழில் வெளியாகியுள்ள அழகும் பொருளும் நிறைந்த சொற்றொடர்கள் சிலவற்றைத் தருகின்ருேம். அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பெயரை எழுதியனுப்புங்கள். அஞ்சலட்டையில் மட்டுமே விடைகளை எழுதவேண்டும். நாம் கொடுத்துள்ள முகவரியை வெட்டி, அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பவேண்டும்.

## சொற்றொடர்கள்

1. தீமையை ஒழிக்க வந்த இராமபாணமாகிவிடும்
2. சமூகப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இன்று மதம் பலமற்று விட்டதா?
3. மனிதருக்காக இரக்கப்படுகிற மனிதர்.
4. எழுத்துயர இவ்வுலகுயரும்.

**முடிவு திகதி : 10-3-66**

வெட்டி ஒட்டவேண்டிய முகவரி:

**பேரும் பரிசும் : 10**
**கலைச்செல்வி**
குமாரசாமிப் புலவர் வீதி,
சுன்னாகம்.

கார்ச் சொந்தக்காரரே!

**ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட**

# சொனன்ஷீன்

**பட்டரிகளையே பாவியுங்கள்.**

**துரை அன்ட் கோ**

23, ஸ்டான்லி வீதி : யாழ்ப்பாணம்.




சுன்னாகம் கலாதேவி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகப் பாடசாலைப் பாட புத்தகங்கள்

o வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவை

## வாசினைப் பாட புத்தகங்கள்

### பாலபோதினி

| | ரூ. ச. |
|---|---|
| அரிவரிப் புத்தகம் (வண்ணப் பதிப்பு) | 60 |
| o முதற் புத்தகம் ,, | 60 |
| o இரண்டாம் புத்தகம் ,, | 70 |
| o மூன்றாம் புத்தகம் ,, | 80 |
| o நான்காம் புத்தகம் | 90 |
| o ஐந்தாம் புத்தகம் | 1-00 |
| o ஆறாம் புத்தகம் | 1-10 |
| o ஏழாம் புத்தகம் | 1-20 |

### பாலபோதினிஉபபாடபுத்தகங்கள்

| | |
|---|---|
| o பரதன் | 50 |
| இராஜாதேசிங்கு | 60 |
| o தமயந்தி | 60 |
| o இராமாயணச் சுருக்கம் | 60 |
| சந்திரமதி | 75 |
| o மணிமேகலை | 1-00 |
| குசேலர் சரிதம் | 60 |
| o சாவித்திரி | 75 |
| o குகன் | 1-00 |
| o சகுந்தலை சரிதம் | 1-25 |
| o திருமாவளவன் | 1-25 |

## சமயம்

### சைவ சமய போதினி

| | |
|---|---|
| o இரண்டாம் வகுப்பு | 70 |
| o மூன்றாம் ,, | 80 |
| o நான்காம் ,, | 90 |
| o ஐந்தாம் ,, | 1-00 |
| o ஆறாம் , | 1-25 |
| ஏழாம் ,, (அச்சில்) | |
| o சைவசமயபாடத்தொகுப்பு (J.S C.) | 1-60 |
| சைவவினாவிடை | |

## இலக்கியம்

### இலக்கிய மஞ்சரி

| | |
|---|---|
| மூன்றாம் புத்தகம் | 70 |
| நான்காம் ,, | 80 |
| ஐந்தாம் ,, | 90 |
| o ஆறாம் ,, | 1-10 |
| o ஏழாம் ,, | 1-30 |
| o தமிழ் மஞ்சரி 1ஆம் புத்தகம் | 1-10 |
| o ,, 2ஆம் ,, | 1-20 |
| o ,, 3ஆம் ,, | 1-30 |

| | ரூ. ச. |
|---|---|
| o தமிழ் மலர் மாலை | 1-25 |

## இலக்கியம்

| | ரூ. ச. |
|---|---|
| o தமிழ் இலக்கியச் சுடர் | 1-25 |
| உரை நடை விருந்து | 1-50 |
| o கட்டுரை மஞ்சரி | 3-00 |

### மொழிப் பயிற்சி

| | |
|---|---|
| முதற் புத்தகம் IIஆம் வகுப்பு | 60 |
| இரண்டாம் ,, IIIஆம் , | 85 |
| மூன்றாம் ,, IVஆம் ,, | 1-00 |
| நான்காம் ,, Vஆம் ,, | 1-10 |
| ஐந்தாம் ,, VIஆம் ,, | 1-20 |
| o ஆறாம் ,, VII & J.S C. | 1-75 |
| o உயர்தர வகுப்பு | 2-50 |
| o தமிழ் மொழிப் பயிற்சியும் தேர்ச்சியும் | 1-60 |
| o பயிற்சிமூலம்பாஷைத்தேர்ச்சி | 1-50 |

## விஞ்ஞானம்

### பொது விஞ்ஞானபோதினி

| | |
|---|---|
| o VIஆம் புத்தகம் | 2-50 |
| o VIIஆம் புத்தகம் | 3-50 |
| o VIIIஆம் புத்தகம் | 4-00 |
| o ஆட்சிஇயல்(Government) | 6-00 |
| o A Guide To Translation Parts I & II | 4-00 |

## சுகாதாரம்

### சுகாதார போதினி

| | |
|---|---|
| நான்காம் வகுப்பு | 1-25 |
| o ஐந்தாம் வகுப்பு | 1-50 |
| o ஆறாம் ஏழாம் வகுப்பு | 2-00 |
| J' S. C. வகுப்பு | 2-50 |
| G. C. E. II | 4-00 |

## கணிதம் சிறுவர் கணக்கு

| | |
|---|---|
| o இரண்டாம் வகுப்பு | 1-25 |
| o மூன்றாம் ,, மாணவர் பிரதி | 1-50 |
| o நான்காம் ,, மாணவர் பிரதி | 1-50 |
| o ஐந்தாம் ,, மாணவர் பிரதி | 1-50 |

### அக்ஷரகணிதம்

| | |
|---|---|
| o I ஆம் பாகம் | 3-00 |
| o II ஆம் பாகம் | 3-00 |

### கேத்திர கணிதம்

| | |
|---|---|
| Iஆம் பாகம் | 3-00 |
| IIஆம் பாகம் | 2-50 |
| o எண் கணிதம் | 3-00 |

# குறிஞ்சி மலர்

## கலைச்செல்வி

ஈழ மண்ணின் பொருளாதாரத்தில், வளர்ச்சியில், சுபீட்சத்தில், செழிப்பில் மலையகத் தமிழர்களின் உழைப்பு எவ்வளவோ முதன்மையானது!

அவற்றையெல்லாம் ஏட்டில், எழுத்தில், தமிழில், இலக்கியத்தில் படித்திருக்கின்றீர்களா?

## இதோ அதற்கோர் சந்தர்ப்பம்

## மலையகத்தினரின் இலக்கிய ஆவேசத்தைக் காணத் தயாராகுங்கள்!

- கலைச்செல்வி சித்திரை இதழ் மலைநாட்டு இலக்கிய மலராகத் தயாராகின்றது.
- முன்னணி இலக்கியவாதிகள் எழுதுகின்றார்கள்.
- அத்தனையும் மணி மணியான படைப்புக்கள்.

மலருக்குத் தங்கள் பங்கைச் செலுத்த விரும்பும் மலைநாட்டு எழுத்தாளர்களே உங்கள் படைப்புகளை
**10-3-66க்கு முன் அனுப்புங்கள்**

## விலை 50 சதம்

கலைச்செல்வி
சுன்னாகம்

கண்டிப்பாக முன்னறிவித்தல் கொடுப்பவர்களுக்கு 'மட்டுமே பிரதிகள் அனுப்ப ஒழுங்குகள் செய்யப்படும்'